
தமிழ்

T.B.
031(4)
N.56.

# வாசகம்

# 4



OFFICE OF THE REG...
26 DEC 1958
...RAS
842
4-56

# உ [illegible] வாசகம்

## நான்காம் புத்தகம்

[இலங்கைப் பாடசாலைகளின் உபயோகத்திற்கென அரசினரின் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது.]

APPROVED FOR CLASS READER
BY THE DIRECTOR OF EDUCATION, JULY 1955.

**திருத்திய பதிப்பு**

REGISTRAR OF BOOKS
28 DEC 1956
MADRAS

கலைவாணி புத்தக நிலையம்
130, திரிகோணமலை வீதி, கண்டி

பதிப்புரிமை] 1956 [விலை சதம் 80

திருத்திய முதற் பதிப்பு—செப்டம்பர், 195
இரண்டாம் பதிப்பு—டிசம்பர், 1955
மூன்றும் பதிப்பு—நவம்பர், 1956

TB
031(4)
N56

86817

Kabeer Printing Works, Madras (3443)

# முன்னுரை

"உழா வாசகம்" என்னும் பெயருடன் வெளிவரும் இந்நூல்கள் "இலங்கைக் கல்விப் பகுதியாரின்" புதிய பாடத்திட்டத்தைத் தழுவி நம் நாட்டு இளைஞர்கள் கற்றுப் பயனடையும் வண்ணம் எழுதப்பெற்றவை யாகும்.

நான்காம் வகுப்பிற்கென அமைந்த இந்நூற்கண் சிறுர்களின் கண்ணைக் கவரும் விளக்கப்படங்களும், கருத்தைக் கவரும் பாட்டுக்களும், உயரிய விஷயங் களும், மொழியறிவை வளர்க்கத்தக்க பயிற்சிகளும் நிரம்ப இடம் பெற்றுள்ளன.

மேனுட்டு நூல்களை யொப்ப இந்நூல் எல்லாச் சிறப் புகளும் நிறைந்து விளங்கவேண்டும் என்பது எமது பேராவல். இதன் ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும் எவர்க்கும் இது எளிதில் புலனுகும்.

ஆசிரியத் தொழிலின் நீண்டநாளனுபவத்தில் கண் டறிந்த நன்முறைகளை அனுசரித்து இளைஞர் தம் உளநிலைக்கேற்ப எழுதிய இந்நூலினை, நம் நாட்டுக் குழந்தைகள் கற்றுப் பயனடைய ஆவன செய்யுமாறு ஆசிரிய அறிஞர்களை அன்பாய் வேண்டுகிறேம்.

கண்டி,
1-10-54


பதிப்பாளர்.

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| 1. | தமிழ்நாடு | ... | 1 |
| 2. | ஆசைக்கோர் அளவில்லை | ... | 5 |
| 3. | உடற்பயிற்சி | ... | 9 |
| 4. | மகாத்மா காந்தி | ... | 12 |
| 5. | வசந்த காலம் வந்தது (பாட்டு) | ... | 16 |
| 6. | யானையும் ஒட்டகமும் | ... | 17 |
| 7. | முகம்மது நபி | ... | 21 |
| 8. | கந்தைத் துணி (சுய சரிதம்) | ... | 25 |
| 9. | தீபாவளி | ... | 29 |
| 10. | சுப்பிரமணிய பாரதியார் | ... | 32 |
| 11. | ஒற்றுமை (பாட்டு) | ... | 36 |
| 12. | பறவைகளின் சிறப்பியல்புகள் | ... | 37 |
| 13. | கிறிஸ்து மகானும் அவர் சீடர்களும் | ... | 41 |
| 14. | கொழும்பு நகரம் | ... | 44 |
| 15. | கடிதத்தின் பிரயாணம் | ... | 48 |
| 16. | வானவூர்தி | ... | 51 |
| 17. | குலம் பெரிதா ? குணம் பெரிதா ? | ... | 55 |
| 18. | கரிகாற் சோழன் | ... | 57 |
| 19. | நெசவுத் தொழில் (பாட்டு) | ... | 60 |
| 20. | வாழைப்பழத் தோல் | ... | 61 |
| 21. | சாரணர் இயக்கம் | ... | 65 |
| 22. | சில சந்தேகங்கள் (சம்பாஷணை) | ... | 69 |
| 23. | விதைகள் பரவும்வகை | ... | 73 |
| 24. | கைத்தொழில் (பாட்டு) | ... | 76 |
| 25. | கடல் கடந்த தமிழன் | ... | 77 |
| | (1) தோத்திரம் செய்யுட்பகுதி | ... | 82 |
| | (2) நீதிவெண்பா ,, | ... | 84 |
| | (3) வாக்குண்டாம் ,, | ... | 86 |
| | (4) தனிப்பாடல்கள் ,, | ... | 89 |
| | (5) திருக்குறள் ,, | ... | 91 |

# உமா வாசகம்

## நான்காம் புத்தகம்




## 1. தமிழ்நாடு

1. நாம் இலங்கையில் வசிக்கிறோம். தமிழ் மொழியைப் பேசுகிறோம். தமிழ் நமது தாய்மொழி. நமது தாய்மொழி இந்தியாவின் தென்பகுதியில்

வழங்குகிறது. தமிழ்மொழி வழங்கும் பகுதிக்குத் **தமிழகம், தமிழ்நாடு** என்னும் பெயர்கள் வழங்கி வருகின்றன.

2. பண்டைக் காலத்தில் தமிழ்நாடு இப்போது இருப்பதைவிடப் பெரிதாய் இருந்தது. இந்தியாவில் இப்பொழுது **திருப்பதி** என வழங்கும் **திருவேங்கட மலை** அக்காலத்தில் தமிழ்நாட்டின் வடக்கெல்லையாய் இருந்தது. **தென்குமரி** அதன் தெற்கெல்லையாகவும், கிழக்கிலும், மேற்கிலும் கடல்கள் எல்லைகளாகவும் இருந்தன.

> " நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று
> நித்தம் தவஞ்செய் குமரி எல்லை—வட
> மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
> மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு "

என்று தமிழ் நாட்டின் எல்லைகளைச் **சுப்பிரமணிய பாரதியார்** என்னும் கவிஞர் வரையறுத்துக் கூறி யுள்ளார். **தென்குமரி** என்பது ஒரு நாட்டின் பெயர். அது கடலால் கொள்ளப்பட்டது. இக் காலத்தில் **குமரிமுனையே** தெற்கெல்லையாய் இருக்கின்றது.

3. தமிழ்நாடு பண்டைக் காலத்தில் மூன்று பெரும் பிரிவுகளாய் விளங்கியது. அப்பிரிவுகளுக்குச் **சேர நாடு, சோழ நாடு, பாண்டி நாடு** என்னும் பெயர்கள் வழங்கி வந்தன. இந்நாடுகளைச் **சேரர், சோழர், பாண்டியர்** என்னும் மூவேந்தரும் ஆட்சி புரிந்தனர்.

4. இம்மூவேந்தரும் ஒவ்வொரு வகை மலர் மாலையையும், ஒவ்வோர் உருவம் பொறித்த கொடி யையும் தத்தம் அடையாளங்களாகக் கொண்டிருந் தனர். **பனந்தோட்டால் ஆன மாலையும், வில் பொறித்த கொடியும்** சேரனுடைய அடையாளங்கள்.

**ஆத்திப்பூ மாலையும், புலிக்கொடியும்** சோழனுடைய அடையாளங்கள். **வேப்பம்பூ மாலையும், மீனக்கொடியும்** பாண்டியனுடைய அடையாளங்கள்.

5. அக்காலத்தில் தமிழ்மொழி சிறந்த நிலையில் இருந்தது. தமிழை ஆராய்ந்த புலவர் பலர் ஒவ்வொரு நாட்டிலும் இருந்தனர். அவர்கள் அழகிய பாடல்களைப் பாடித் தமிழ்மொழியைச் சிறப்பித்தார்கள். அவர்கள் மூவேந்தர்களாலும் ஆதரிக்கப்பட்டார்கள். அதனால் தமிழ்நாட்டில் தமிழ்ப் புலமை நிரம்பி இருந்தது.

6. பண்டைக் காலத்திலே தமிழ்நாடு நாகரிகத்தில் மேம்பட்டிருந்தது. கணிதம், வைத்தியம், சிற்பம், இசை, நாட்டியம் முதலிய கலைகளில் தமிழர் சிறந்து விளங்கினர். **கிரேக்கம், எகிப்து, பாரசீகம், சீனம், கடாரம்** முதலிய அயல்நாடுகளுக்குத் தமிழ் மக்கள் மரக்கலங்களில் சென்று வாணிகம் நடத்தி வந்தார்கள்.

7. இவ்வாறு சிறப்புடன் விளங்கிய தமிழ்நாடு இப்போது பரப்பிலும், சிறப்பிலும் குன்றியுள்ளது. தமிழ்மொழியும் தாழ்நிலை அடைந்துள்ளது. தமிழ் நாட்டின் பெருமையையும், தமிழின் சிறப்பையும் பண்டை நிலைமைக்குக் கொண்டுவரப் பாடுபட வேண்டுவது நம் கடமையாகும்.

| | | |
|---|---|---|
| பெரும்பகுதி | கவிஞர் | நாகரிகம் |
| தமிழகம் | மூவேந்தர் | மேம்பாடு |
| பண்டைக்காலம் | அடையாளம் | கலைகள் |
| எல்லைகள் | பனந்தோடு | அயல்நாடு |
| நித்தம் | பொறித்த | மரக்கலம் |
| மாலவன் குன்றம் | மீனக்கொடி | குன்றியுள்ளது |
| வரையறுத்து | தமிழ்ப்புலமை | வாணிகம் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. தமிழ்நாடு என ஏன் அழைக்கப்படுகின்றது ?
2. தமிழ்நாட்டின் பண்டை எல்லைகள் எவை ?
3. இக்காலத்தில் தமிழ்நாட்டின் தெற்கெல்லை யாது ?
4. தமிழ்நாட்டின் பண்டைக்காலப் பெரும்பிரிவுகள் எவை ?
5. தமிழ்நாட்டை ஆட்சி புரிந்த மூவேந்தர் யார் ?
6. பாண்டியனுடைய அடையாளங்கள் யாவை ?
7. மூவேந்தர் காலத்தில் தமிழ்ப்புலமை நிரம்பி இருந்த தற்குரிய காரணம் என்ன ?
8. பண்டைக் காலத்தில் தமிழர் எவற்றில் சிறந்து விளங்கினர் ?
9. முற்காலத்தில் தமிழர் வாணிகம் செய்த பிறநாடுகள் யாவை ?

**பேச்சு :**

**பொருத்தமான சொற்களை வைத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக :**


1. நாம் —— வசிக்கிறோம்.
2. திருவேங்கடமலை தமிழ்நாட்டின் —— எல்லையாகும்.
3. தென்குமரி —— ஒரு —— பெயர்.
4. ஆத்திப்பூ மாலையும் —— சோழனுடைய அடையாளங்கள்.
5. தமிழ்நாடு —— மேம்பட்டிருந்தது.

**பின்வரும் சொற்களின் பொருள் விளங்க வசனங்கள் ஆக்குக :**

| | | |
|---|---|---|
| 1. தமிழகம் | 3. வேந்தர் | 5. கலைகள் |
| 2. கவிஞர் | 4. அடையாளம் | 6. வாணிகம் |

**எழுத்து :**

தமிழ்நாட்டின் சிறப்புகளை எழுதுக.



## 2. ஆசைக்கோர் அளவில்லை

1. ஓர் ஊரின் கடற்கரையில் ஒரு சிறு குடிசை இருந்தது. அந்தக் குடிசையில் ஒரு செம்படவனும், அவன் மனைவியும் வசித்து வந்தார்கள். செம்படவன் தினந்தோறும் கட்டுமரத்தில் சென்று கடலில் தூண்டிலிட்டு மீன் பிடித்துவருவான். அதனை அவன் மனைவி சந்தைக்குக் கொண்டு சென்று விற்று வருவாள். மீன் விற்ற பணத்தைக் கொண்டு அவர்கள் சிக்கனமாகச் சீவித்து வந்தார்கள்.

2. ஒரு நாள் செம்படவன் வழக்கம்போல மீன் பிடிக்கச் சென்றான். வெகு நேரமாக அவனுடைய தூண்டிலில் மீன் அகப்படவில்லை. கடைசியாகத் தூண்டிலை ஏதோ கவ்வி இழுப்பதாக உணர்ந்து தூண்டிற் கயிற்றை இழுத்தான். தூண்டிலில் ஒரு பெரிய மீன் அகப்பட்டிருந்தது. அதனைக் கண்டு செம்படவன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்.

3. அந்தப் பெரியமீன் செம்படவனைப் பார்த்து, "இரக்கமுள்ள வலைஞனே! என்னைக் கொல்லாமல் விட்டுவிடு. நீ விரும்பிய எல்லாவற்றையும் நான் உனக்குத் தருகிறேன்," என்று சொல்லியது. செம்படவன் ஆச்சரியத்துடன் அந்த மீனின் வேண்டுகோளை ஏற்று அதனைக் கடலில் விட்டான்.

4. செம்படவன் கடலில் இருந்து வீட்டுக்குத் திரும்பியதும், அன்று கடலில் நடந்த அதிசயமான சம்பவத்தைத் தன் மனைவிக்குச் சொன்னான். அவன் மனைவி ஒரு பேராசைக்காரி. அவள் தன் கணவனைப் பார்த்து, "என்ன காரியம் செய்தீர்கள்? எத்தனை நாளைக்கு நாம் இப்படியே வறுமையால் வாடுவது? குளிர் நடுக்கத்துடன் இச்சிறு குடிசையில் எப்படி வாழ்வது? அந்த மீனிடம் ஒரு மாளிகையைக் கேட்டுப் பெற்றிருக்கக் கூடாதா?" என்று கோபத்துடன் பேசினாள்.

5. மறுநாள் செம்படவன் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்றான். முதல் நாளில் அவனால் கடலில் விடப்பட்ட மீன், அவனிடம் தானே வந்து, "வலைஞனே! உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்; தருகிறேன்," என்று சொல்லியது. அப்பொழுது முதல் நாளில் தன் மனைவி பேசியது நினைவிற்கு வந்தது. உடனே அவன், "நான் வசிக்கும் சிறு குடிசை ஓர் பெரிய மாளிகையாக ஒரு வரந் தரவேண்டும்," என்று கேட்டான். "அவ்வாறே தந்தேன்," என்று சொல்லி மீன் நீருள் மறைந்து விட்டது.

6. செம்படவன் கரைக்கு வந்து தனது சிறு குடிசையைப் பார்த்தான். அது பெரிய மாளிகையாக விளங்கியது. அம்மாளிகையின் மேல்மாடியில்

அவன் மனைவி உலாவிக் கொண்டிருந்தாள். ஆனால், அவன் மனைவி அவ்வளவுடன் திருப்தி அடைந்துவிட வில்லை. 'தான் ஒரு அரசியாக வேண்டும். தன்னைச் சுற்றி நின்று பணிப்பெண்கள் பலர் ஏவல் செய்ய வேண்டும்,' என்று விரும்பினாள். தன் கணவனிடம் தன் விருப்பத்தைக் கூறித் தான் ஓர் அரசியாக வரம் பெற்று வரும்படி வேண்டினாள். கணவனோ, "பேராசை கூடாது; கிடைத்ததுடன் திருப்தி அடைந்து மகிழ்ச்சியாக இரு," என்று புத்தி புகட்டி னான். கணவனின் வார்த்தைகளை அவள் கேட்க வில்லை. எப்படியாவது தான் அரசியாகிவிட வேண் டும் என்று பிடிவாதம் செய்தாள்.

7. அடுத்த நாள் வழக்கம்போலச் செம்படவன் கடலுக்குச் சென்றான். அன்றும் அந்த மீன் அவ னிடம் வந்தது. அம்மீனிடம் அவன் தன் மனைவி விரும்பிய வரத்தைக் கேட்டான். அது அவன் கேட்ட வரத்தைக் கொடுத்தது. செம்படவன் மனைவி அரசியானாள். அவள் குடியிருந்த மாளிகை பெரிய அரண்மனையாக விளங்கியது. தாதிப் பெண்கள் பலர் அவளுக்கு ஏவல் செய்தார்கள். அப்படியிருந் தும் அவள் மனம் திருப்தி அடையவில்லை. இந்தப் பரந்த உலகத்திற்குத் தானே தனியரசியாக விளங்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அதற்காக வரம் பெற்று வருமாறு தன் கணவனை வற்புறுத்தினாள். கணவனும் தன் மனைவியின் ஆசைக்கோர் அள வில்லை என்பதை அறிந்து வருந்தினான்.

8. அடுத்த நாள் செம்படவன் அந்த மீனிடம் சென்று தன் மனைவியின் பேராசையையும், அவள் தனக்குக் கொடுக்கும் தொந்தரவையும் எடுத்துச் சொல்லி, அவளுக்குப் பழைய நிலைமை ஏற்பட வரந்

தர வேண்டும் என்று மன்றுடினான். மீனும் அவன் விரும்பிய வரத்தை அளித்தது. அதனால் அவள் வசித்த அரண்மனை சிறு குடிசையாக மாறியது. அவளும் முன்போலச் சாதாரணப் பெண்ணாக மாறினாள்.

9. அவள், தன் பேராசை மீண்டும் தரித்திரத்தில் கொண்டு வந்து சேர்த்ததை உணர்ந்தாள். தன் கணவனின் வார்த்தைகளைக் கேளாது புறக்கணித்தமையை நினைந்து வருந்தினாள். குடிசை வாழ்வில் திருப்தி அடைந்து மகிழ்ச்சியாக வாழ்ந்தாள்.

"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து."

| | | | |
|---|---|---|---|
| கடற்கரை | வலைஞன் | வேண்டினான் | தொந்தரவு |
| குடிசை | அதிசயம் | புகட்டினான் | அளித்தது |
| செம்படவன் | வேண்டுகோள் | திருப்தி | தரித்திரம் |
| கட்டுமரம் | பேராசை | அரண்மனை | புறக்கணித்தல் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. குடிசை எங்கே இருந்தது?
2. செம்படவனின் தொழில் என்ன ?
3. கடலில் நடந்த அதிசய சம்பவம் என்ன ?
4. செம்படவனின் மனைவி எப்படிப் பட்டவள்?
5. அவள் தன் கணவனை ஏன் கோபித்துப் பேசினாள்?
6. செம்படவன் மீனிடம் கேட்ட வரங்கள் எவை?

**பேச்சு :**

**பின்வரும் சொற்களுக்குப் பதிலாக அப்பொருள் தரும் பிற சொற்களை வைத்து நிரப்புக :**

1. தினந்தோறும் **செம்படவன்** கடலில் மீன் பிடிப்பான்.

2. அவளைச் சூழப் **பணிப்பெண்கள்** நின்றுகொண்டு இருந்தனர்.


3. தன் கணவனின் வார்த்தைகளைப் **புறக்கணித்தாள்.**

**பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொற்கள் கூறுக :**

1. சிறிய 2. மகிழ்ச்சி 3. குடிசை 4. திருப்தி.

**எழுத்து :**

நீ படித்த கதையைச் சுருக்கி எழுதுக.




# 3. உடற்பயிற்சி

1. “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்,” என்பது பழமொழி. நாம் நோய் இன்றிச் சுகமாய் இருக்கவேண்டுமாயின் நமது உடல் உறுதி அடைய வேண்டும். உடம்பு உறுதியடைவதற்குச் சுத்தமான காற்று, சுத்தமான நீர், நல்ல உணவு, உடை, உடற்பயிற்சி என்பன அவசியமாகும்.

2. உடற்பயிற்சி செய்வதனால் நமது உடம்பில் உள்ள தசைநார்கள் உறுதியடைகின்றன. உடற்பயிற்சி செய்யும்பொழுது அதிகமான காற்றை உட்கொள்ளுகிறோம். அதனால் இரத்தம் நன்கு சுத்தம் அடைகிறது. உடம்பில் உள்ள அழுக்கு நீர் வியர்வையாக மாறி வெளியேறுகிறது. உணவு நன்றாகச் சீரணமாகின்றது. ஞாபக சக்தி விருத்தியாகின்றது. உடல் உறுப்புகள் சோர்வு நீங்கி உற்சாகமடைகின்றன.

3. உடம்பில் உள்ள ஒவ்வோர் உறுப்புக்கும் பயன் உண்டாக்கத் தக்க உடற்பயிற்சிகள் பல உண்டு. அவை காலப்பியாசம், கழுத்தப்பியாசம், கை அப்பியாசம், வயிற்றப்பியாசம் முதலியனவாம். இவ்வப்பியாசங்களை நாம் முறைப்படி செய்தல் வேண்டும்.

4. சரீரத்திற்கு வலிமையைத் தரும் விளையாட்டுகளும் பல இருக்கின்றன. பண்டைக் காலத்தில், சிலம்பப் பயிற்சி, மல்யுத்தம் முதலிய பலவற்றில் மக்கள் பயிற்சி உடையவர்களாய் இருந்தார்கள். தற்காலத்தில், கிராமப் புறங்களில், **கிளிக்கோடு பாய்தல், வாரடித்தல், கெந்தி அடித்தல்** முதலிய விளையாட்டுகள் நடைபெறுகின்றன. இவற்றைத் தற்காலத்தில் "கீழைத்தேய விளையாட்டுகள்," என அழைக்கிறார்கள்.



5. நகர்ப்புறங்களில் "**ரெனிஸ்**" ஆட்டம், "**கிறிக்கற்**" ஆட்டம், **உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம்** முதலிய பல விளையாட்டுகளை விளையாடுகிறார்கள். இவைகள் "மேனாட்டு விளையாட்டுகள்," எனப்படும்.

6. உடற்பயிற்சி எப்பொழுதும் சுத்தமான காற்று வீசும் திறந்த வெளியில் நடைபெற வேண்டும். உடற்பயிற்சி செய்யும்பொழுது மூக்கினூற் சுவாசித்தல் வேண்டும். உணவு உண்ட பின்னர் உடற்பயிற்சி செய்தல் கூடாது. யோகாசனங்

களும் சிறந்த உடற் பயிற்சிகளாகும். மேல் வகுப்பு களில் நீங்கள் அவற்றைப் பற்றிப் படிப்பீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| பழமொழி | வியர்வை | உறுப்புகள் | நகர்ப்புறம் |
| உறுதி | சீரணம் | அப்பியாசம் | திறந்தவெளி |
| அவசியம் | ஞாபகசக்தி | சரீரம் | சுவாசித்தல் |
| பயிற்சி | சோர்வு | கிராமப்புறம் | யோகாசனம் |
| தசைநார் | உற்சாகம் | கீழைத்தேயம் | மேல்வகுப்பு |

## பயிற்சி

**விளக்கம் :**

1. நாம் எப்பொழுது சுகமாய் இருக்கலாம்?
2. நாம் சுகமாய் இருப்பதற்கு அவசியமானவை யாவை?
3. உடற்பயிற்சி செய்வதனல் ஏற்படும் நன்மைகள் எவை?
4. உடம்பின் வெவ்வேறு உறுப்புகளுக்கும் பயன் கொடுக்கும் அப்பியாசங்கள் எவை?
5. கீழைத் தேய விளையாட்டுகள் எவை?
6. மேனுட்டு விளையாட்டுகள் எவை?
7. எப்படிப்பட்ட இடத்தில் உடற்பயிற்சி நடைபெற வேண்டும்?

**பேச்சு :**

**பின் வரும் தடித்த சொற்களுக்குப் பதிலாக அப்பொருள் தரும் பிற சொற்கள் வைத்து நிரப்புக :**


1. நமது உடல் உறுதி அடைய வேண்டும்.
2. உடற்பயிற்சி செய்வதனல் தசைநார்கள் உறுதி அடைகின்றன.
3. **தற்காலத்தில்** கீழைத்தேய விளையாட்டுகள் என அழைக்கிருர்கள்.
4. உணவு உண்ட பின்னர் உடற்பயிற்சி செய்தல் கூடாது.

**எதிர்ச் சொற்கள் கூறுக :**

| | | | |
|---|---|---|---|
| 1. உறுதி | 3. நல்ல | 5. பல | 7. சுத்தம் |
| 2. சுகம் | 4. சோர்வு | 6. தற்காலம் | 8. புதிது. |

**எழுத்து :**

1. உடற்பயிற்சி செய்வதனல் ஏற்படும் நன்மைகளை எழுதுக.
2. இப்பாடத்திலுள்ள பழமொழியை எழுதுக.



## 4. மகாத்மா காந்தி

1. உலகத்தில் தோன்றிய பெரியார்களுள் மகாத்மா காந்தி மிகவும் சிறந்தவர். அவர் வட இந்தியாவில் உள்ள பம்பாய் மாகாணத்தில் ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து ஒன்பதாம் ஆண்டு பிறந்தார். அவருடைய தந்தை தாயார் அவருக்கு மோகனதாஸ் காந்தி என்று பெயரிட்டனர்.

2. அவர் கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்தவர். பெற்றோர் சொற்படியே நடப்பவர். எப்பொழுதும் உண்மையே பேசுபவர். கடவுள் பக்தியில் உயர்ந்தவர். அவர் தம்முடைய பத்தொன்பதாம் வயதில் சட்டநூற் கல்வி கற்பதற்கு இங்கிலாந்திற்குச் சென்றார். அங்கே தமது அன்னையாரின் விருப்பப்படி மதுபானம் அருந்தாது, மாமிசம் புசியாது ஒழுக்கமுடையவராய் விளங்கினர்.

3. சில ஆண்டுகளின் பின்னர்க் காந்தி இங்கிலாந்தில் இருந்து நியாயவாதியாக இந்தியாவிற்கு

வந்தார். அங்கே தமது தொழிலில் மிகவும் திறமை உள்ளவராக விளங்கினர். அதனல் அவர் ஒரு வழக்கை நடத்துவதற்காகத் தென் ஆபிரிக்காவிற்கு அழைக்கப்பட்டார். தென் ஆபிரிக்காவில் இந்திய மக்கள் பிறரால் அவமதிக்கப்படுவதைக் கண்டார். மனம் வருந்தினர். அங்கே உள்ள இந்திய மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கப் பெரும் பிரயாசைப் பட்டார்.

4. அவர் எப்பொழுதும் உண்மையும், அன்புமே வெற்றி அளிக்கும் என்று நம்பினர். அதனல் அன்பு நெறியைப் பின்பற்றி அதிகாரிகளுடன் வாதிட்டார். அதன் பயனுகப் பலமுறை சிறை சென்றார். இறுதி யில் தென் ஆபிரிக்காவில் உள்ள இந்திய மக்களின் துன்பங்களை நீக்கச் சட்டம் இயற்றப் பெற்றது. இவ் வெற்றியுடன் இந்தியா திரும்பினர்.

5. இந்தியாவில் அன்னியர் ஆட்சியில் மக்கள் துன்பப்படுவதை அறிந்தார். மக்கள் விடுதலை பெற வேண்டும் என்று சிந்தித்தார். தேச விடுதலைக்காகத் தன்னைத் தியாகம் செய்தார். சுதந்திரப் போராட்டத் தில் கலந்து கொண்டார். அன்பு நெறியைப் பின் பற்றி அன்னியரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு வற்புறுத்தினர். இதனல் அவர் பல துன்பங்களை அடைந்தார். பலமுறைகளில் சிறைவாசம் செய்தார். பல தருணங்களில் பட்டினியாய் இருந்தார். தான் எவ்வளவு துன்பம் அடைந்தாலும் தன் நாட்டு மக்கள் விடுதலை பெறவேண்டும் என்று விரும்பி உழைத்தார்.

6. அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்ச்சிக் காக இடைவிடாது உழைத்தார். நாட்டு மக்களின் வறுமையைப் போக்குவதற்காகப் பிரயாசைப்பட்டார். ஒவ்வொருவரும் இராட்டையில் நூல் நூற்க வேண்டு

மெனக் கேட்டுக் கொண்டார். கையினுல் நெய்யப் பட்ட துணிகளையே மக்கள் உடுக்க வேண்டுமென வற்புறுத்தினுர். தாமும் அவ்வாறே செய்து வந்தார்.

7. அவர் பிற உயிர்களிடத்தில் அன்புள்ளவர். சத்தியத்தையே விரதமாகக் கொண்டவர். அவருடைய அரும் பெரும் செயல்களால் உலகம் அவரைப் புகழ்ந்தது. மக்களும் அவரை **மகாத்மா** எனப் போற்றினர். அவரின் இடைவிடாத சேவையின் பயனுக இந்திய நாடும் விடுதலை அடைந்தது.

8. "மக்களுள் உயர்வு தாழ்வு இல்லை. கடவுள் படைப்பில் யாவரும் சமம். வகுப்பு வேற்றுமையின்றி வாழவேண்டும்." என்பன இவரின் போதனைகள். இப்போதனைகளில் வெறுப்படைந்த ஓர் இந்து வாலிபன் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டு இப்பெரியாரைச் சுட்டுக் கொன்ருன். இவரது மரணத்தைக் கேட்டு உலகம் முழுவதும் வருந்தியது. இவருடைய உயர்ந்த கொள்கைகள் இப்பொழுது "**காந்தீயம்**" என்னும் பெயருடன் உலகம் முழுவதும் பரவிவருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| ஒழுக்கம் | அவமதிப்பு | அன்னியர் | சத்தியம் |
| பக்தி | பிரயாசை | ஆட்சி | அரும்பெரும் |
| சட்டநூல் | அன்புநெறி | சிந்தித்தார் | இடைவிடாது |
| மதுபானம் | வாதிட்டார் | சிறைவாசம் | படைப்பு |
| அருந்தாது | சட்டம் | தருணம் | காந்தீயம் |
| நியாயவாதி | துன்பம் | இராட்டை | மரணம் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. மகாத்மா காந்தி எப்பொழுது பிறந்தார்?
2. அவரிடம் காணப்பட்ட சிறந்த குணங்கள் எவை?
3. காந்தி தென் ஆபிரிக்காவுக்கு ஏன் அழைக்கப் பட்டார்?

4. தென் ஆபிரிக்க இந்தியர்களுக்கு அவர் ஆற்றிய சேவைகள் யாவை?

5. இந்தியாவில் காந்தியின் உள்ளத்தை வருத்தியது யாது?

6. அவர் அன்னியருடன் எவ்வாறு நடந்துகொண்டார்?

7. காந்தி சிறை செல்ல நேர்ந்தது ஏன்?

8. காந்தி மகானை மக்கள் எவ்வாறு போற்றினர்கள்?

9. மகாத்மா காந்தியின் போதனைகள் எவை?

10. மகாத்மா எவ்வாறு மரணமானர்?

**பேச்சு :**

**கீழ்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் ஆக்குக :**

| | | | |
|---|---|---|---|
| 1. பெரியார் | 3. மாமிசம் | 5. அரும்பெரும் | 7. இராட்டை |
| 2. உண்மை | 4. அவமதிப்பு | 6. இடைவிடாது | 8. சேவை |

**பின்வரும் சொற்களை முறைப்படி ஒழுங்குபடுத்தி வாக்கியங்கள் அமைக்க :**

1. கல்வி சிறந்தவர் ஒழுக்கங்களில் காந்தி அறிவு.

2. இங்கிலாந்தில் விளங்கினர் இவர் உடையவராய் ஒழுக்கம்.

3. சிந்தித்தார் விடுதலை பெறவேண்டும் என்று மக்கள்.

4. பின்பற்றி அன்பு நெறியை அன்னியரை வேண்டினர் வெளியேறுமாறு.

5. சேவையால் இடைவிடாத இந்திய நாடும் அடைந்தது விடுதலை அவருடைய.

**எழுத்து :**

மகாத்மா காந்தியின் சேவைகளை எழுதுக.

# 5. வசந்த காலம் வந்தது

1. மின்னி மேகம் பரவுது
மெல்ல மெல்லத் துளிக்குது
என்ன சொல்லித் துளிக்கு தென்று
இயம்புகின்றேன் கேளம்மா!


2. மண்ணில் கொஞ்ச நாட்களாய்
மறைந் துறங்கும் செடிகளே!
கண்மலர்ந்து வாருங்கள்
காலையாச்சு தென்குது.

3. பட்டு டுத்து வாருங்கள்
பணிகள் பூண்டு வாருங்கள்
பொட்டணிந்து சீக்கிரம்
புறப்படுங்கள் என்குது.

4. வாசச் செப்பைத் திறவுங்கள்
வாரி யெங்கும் வீசுங்கள்
ஈசன் பாத பூசனைக்கு
எழுந்திருங்கள் என்குது.

5. வாட்ட மெல்லாம் நீங்கவே
வசந்த காலம் வந்தது
மீட்டும் நன்மை காணலாம்
விரைந் தெழுங்கள் என்குது.

—கவிமணி, தேசிகவிநாயகம் பிள்ளை



## 6. யானையும் ஒட்டகமும்

1. மேலே உள்ள படத்தில் இரண்டு மிருகங்கள் இருக்கின்றன. அவற்றுள் கூன் முதுகு உள்ளது ஒட்டகம். மற்றது யானை. இவை இரண்டும் விலங்குகளுக்குள் பெரியவை. வெப்ப மண்டலத்தில் வசிப்பவை.

2. இம்மிருகங்களில் ஒட்டகத்தின் தலை கொம்பில்லாமல் குதிரைத் தலைபோல இருக்கிறது. ஆனால், அதன் முகம் விகாரமாய்க் காணப்படுகிறது. யானையின் தலை மிகப் பெரியதாய் இருக்கிறது. அதன் முகத்திலிருந்து ஒரு நீண்ட உறுப்பு தொங்குகிறது. அதற்குத் **துதிக்கை** என்று பெயர். அதன் நுனியில் விரல் போன்ற ஒரு சிற்றுறுப்பு உண்டு. அதன் உதவியால் யானை எவ்வளவு சிறிய பொருளையும் தரையிலிருந்து எடுக்கக்கூடும்.

3. யானையின் கண்கள் மிகச் சிறியவை. ஆனால், காதுகளோ முறம்போல மிகப் பெரியவை. யானையின் வாயிலிருந்து இரண்டு கொம்புகள் வளர்ந்திருக்கின்றன. அவை ‘ தந்தம் ’ எனப்படும். தந்தம்

விலை உயர்ந்த பொருள்களுள் ஒன்று. அதனாலே தான், "**யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்,**" என்னும் பழமொழி வழங்கி வருகிறது.

4. இவ்விலங்குகளின் உடல்களில் யானையின் உடல் மிகப் பருத்திருக்கிறது. ஆனால், அதன் முதுகு அகன்று சமமாய் இருக்கிறது. ஒட்டகத்தின் உடல் சிறியது. அதன் முதுகு கூனியுள்ளது. அக் கூனுக்குத் '**திமில்**' என்று பெயர். யானையின் கழுத்து பருத்துக் குறுகிக் காணப்படுகிறது. ஒட்டகத்தின் கழுத்து சிறுத்து நீண்டிருக்கிறது.

5. யானையின் கால்கள் உரல்போலப் பருத்துக் குட்டையாய் அமைந்துள்ளன. ஒட்டகத்தின் கால்களோ மெல்லியவையாயும், நீண்டும் இருக்கின்றன. யானையின் காலில் குளம்பில்லை; ஆனால், ஒட்டகத்தின் குளம்புகள் பிளவுபட்டுள்ளன. அக்குளம்புகளின் அடிப்பாகம் மிருதுவாய் இருக்கும். ஆதலால் ஒட்டகம் நடக்கும்போது அதன் பாதங்கள் மணலில் அழுந்துவதில்லை. இவ்விரண்டு மிருகங்களின் வால்களும் விகாரமான தோற்ற முடையன.

6. யானை அடர்ந்த காடுகளில் வசிக்கும். அங்கு கிடைக்கும் தழைகளைத் தின்று வாழும். அதற்குக் கரும்பு, தென்னை ஓலை, வாழை என்பவற்றில் அதிக விருப்புண்டு. ஒட்டகம் பாலைவனத்தில் வசிக்கும் பிராணி. ஆதலால், அது அங்குக் கிடைக்கக் கூடிய முட்புதர்களின் இலைகளைத் தின்று வாழும். பொதுவாக அதற்குக் கசப்பான இலைகளின்மேல் பிரியமுண்டு. அதனால் அது வேப்பிலையை விரும்பித் தின்னும். பேரீச்சம்பழமும் அதன் விருப்பமான உணவாகும். ஒட்டகம் நீர் கிடையாத பாலை

வனங்களில் வசிக்கும் பிராணி ஆகையால், ஆறு அல்லது ஏழு நாட்கள் வரையில் தண்ணீர் குடிக் காமலே வாழ்ந்திருக்கக் கூடிய வல்லமை அதற்கு உண்டு. அது சில நாட்கள் வரையில் ஆகாரம் இல்லாமலும் இருக்கும்.

7. இவ்விரு மிருகங்களும் மாந்தர்க்குப் பயன் படக் கூடியவை. இவற்றை மக்கள் பிடித்துப் பழக்கி வேலை செய்விக்கிறார்கள். யானைகள் பாரமான சுமை களைத் தூக்கிச் செல்லவும், இழுத்துச் செல்லவும் பயன்படுகின்றன. ஒட்டகங்கள் சுமைகளைச் சுமக்க வும், பாலைவனங்களைக் கடக்கவும் உதவுகின்றன. ஒட்டகத்தின் உடல் அமைப்பு அதற்கு ஏற்றபடி அமைந்துள்ளது. அதனாலேதான் ஒட்டகத்துக்குப் '**பாலைவனக் கப்பல்**' என்னும் பெயர் வழங்கி வரு கிறது. ஒட்டகங்கள் வட இந்தியாவில் வண்டிகள் இழுக்கவும், எகிப்து தேசத்தில் ஏர் உழவும் உதவு கின்றன.

8. ஒட்டகங்கள் நமது நாட்டில் கிடையா. மிருகக் காட்சிச் சாலையில் நாம் அவற்றைக் காண லாம். யானைகள் நமது நாட்டுக் கோவில்களிலும், பணக்காரர்களின் இல்லங்களிலும் பழக்கி வளர்க்கப் படுகின்றன. விழாக்காலங்களில் ஊர்வலம் நடக்கும் பொழுது அலங்கரிக்கப்பட்ட யானைகள் ஊர்வலத்தின் முன்னே அணிவகுத்துச் செல்வதைப் பார்க்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| கூன்முதுகு | துதிக்கை | குட்டையாய் | கசப்பு |
| விலங்குகள் | சிற்றுறுப்பு | குளம்பு | பாலைவனக்கப்பல் |
| வெப்பமண்டலம் | முறம் | அழுந்துவது | சுமைகள் |
| விகாரத்தோற்றம் | தந்தம் | தழைகள் | ஊர்வலம் |
| அடர்ந்தகாடு | திமில் | முட்புதர் | அணிவகுத்து |

## பயிற்சி

**விளக்கம் :**

1. யானையின் தலைக்கும் ஒட்டகத்தின் தலைக்கும் உள்ள வேற்றுமை யாது?
2. துதிக்கை என அழைக்கப்படுவது எது?
3. யானையைப் பற்றி வழங்கும் பழமொழி யாது?
4. ஒட்டகத்தின் பாதங்கள் எவ்வாறு அமைந்துள்ளன?
5. யானை எங்கே வசிக்கிறது? அதன் ஆகாரங்கள் யாவை?
6. ஒட்டகம் எங்கே வசிக்கின்றது? அதன் பிரியமான உணவு யாது?
7. ஒட்டகம் 'பாலைவனக் கப்பல்' என அழைக்கப் படுவதற்குரிய காரணம் என்ன?
8. யானையின் உபயோகங்கள் யாவை?

**பேச்சு :**

**ஏற்ற சொற்களை வைத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. ஒட்டகத்தின் தலை —— குதிரைத் தலைபோல ——.
2. துதிக்கையின் நுனியின் —— போன்ற ஒரு —— உண்டு.
3. யானை —— ஆயிரம் —— இறந்தாலும் —— பொன்.
4. ஒட்டகத்தின் —— சிறுத்து —— இருக்கிறது.
5. ஒட்டகத்துக்கு —— என்னும் பெயர் ——.

**பின்வரும் சொற்களின் பொருள் விளங்க வாக்கியங்கள் அமைக்க :**

| | | | |
|---|---|---|---|
| 1. வெப்பம் | 3. திமில் | 5. முறம் | 7. ஊர்வலம் |
| 2. தந்தம் | 4. குளம்பு | 6. விகாரம் | 8. சுமை |

**எழுத்து :**

1. யானையின் உபயோகங்களை எழுதுக.
2. ஒட்டகத்தைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

# 7. முகம்மது நபி

1. நமது நாட்டில் பல மதங்கள் அனுசரிக்கப் பட்டு வருகின்றன. அவற்றுள் 'இஸ்லாம்' என் பது ஒன்று. இஸ்லாத்தைப் பின்பற்றும் மாந்தர் '**இஸ்லாமியர்**' என்றும், '**முஸ்லிம்கள்**' என்றும் அழைக்கப்படுகின்றனர்.

2. 'இஸ்லாம்' மார்க்கத்தைப் போதித்தவர் **முகம்மது நபி** என்னும் பெரியார். அவரைப் பின் பற்றுவதால் முஸ்லிம்களை **முகம்மதியர்** என்றும் அழைக்கின்றனர்.

3. நமது நாட்டுக்கு மேற்கே உள்ள அராபியா நாட்டில், மக்கா என்னும் பட்டணத்தில், ஓர் உயர்ந்த குடும்பத்தில் கிறிஸ்துவுக்குப்பின் ஐஞ்ஞூற்று எழுப தாம் ஆண்டில் முகம்மது நபி அவதரித்தார். அவர் தந்தையார் பெயர் **அப்துல்லா**. தாயார் பெயர் **ஆமினு**. முகம்மது நபி பிறப்பதற்கு முன்னரே அவர் தந்தையார் இறந்துவிட்டார். சில ஆண்டு களின் பின்னர் அவர் அன்னையாரும் மரணம் அடைந்தார். அதனால் முகம்மது நபி அவருடைய பாட்டனுரான **அப்துல் முத்தலிபு** என்பவரால் வளர்க்கப்பட்டார்.

4. நபிநாயகம் இளமையிலேயே நற்குண நற் செயல்கள் நிரம்பியவராய் இருந்தார். தெய்வபக்தி அவருக்குப் பிறவிக்குணமாய் இருந்தது. அவர் **கிரா** என்னும் மலையில் உள்ள ஒரு குகைக்கு அடிக் கடி சென்று தியானத்தில் ஆழ்ந்திருப்பார்.

5. அவர் வாலிபப் பருவம் அடைந்தபோது **கதீசா** என்னும் பெயருடைய ஒரு சீமாட்டியார் அவரை விரும்பி மணந்தார். முகம்மது நபி வழக்

கம்போல் ஒரு நாள் தியானத்தில் இருந்தபோது, அவர் முன் ஒரு தேவதூதர் தோன்றிச் சில உபதேச மொழிகளைக் கூறிச் சென்றார். அன்று முதல் அவர் நபி என அழைக்கப்படலாயினர். நபி என்னும் சொல்லுக்கு, "இறைவன் அருளைப் பெற்று மக்களுக்கு நல்லறிவைப் புகட்டுகிறவர்," என்பது பொருள்.

6. நபிநாயகம் அவர்கள் கிரா மலையை விட்டு இல்லத்தை அடைந்து தம் மனைவியாரிடம் தேவதூதரின் உபதேச மொழிகளைக் கூறினர். அவற்றின் பெருமையை அறிந்த அவ்வம்மையார் மகிழ்வோடு அவற்றை உடனே ஏற்றுக்கொண்டார். ஆகவே, இஸ்லாத்தை முதன் முதலாகத் தழுவிய பெருமை கதீசா அம்மையாருக்கே உரியது.

7. பின்னர் நபிநாயகம் அராபிய மக்களை நல்வழியிற் செலுத்த விரும்பி அவர்களுக்கு, "கடவுள் ஒருவரே. அவர் உருவம் அற்றவர். அவர் முன்னிலையில் மக்கள் அனைவரும் உயர்வு தாழ்வு இல்லாத நிலை உடையவர்கள். கடவுளின் உருவங்களை அமைப்பதும், அவற்றை வணங்குவதும் தவறு. மதுபானத்தை மக்கள் மனத்தாலும் நினைத்தல் கூடாது. பொய் பேசுதல், களவெடுத்தல் முதலிய பாவச் செயல்களை நீக்கவேண்டும். பிற உயிர்களிடத்தில் அன்பாயிருத்தல் வேண்டும்," என்னும் உபதேச மொழிகளைக் கூறலானர்.

8. அராபியாவில் அக்காலத்தில் வசித்து வந்த மக்கள் முரடர்கள். அவர்கள் சிலை வணக்கம் புரிந்து வந்தார்கள். ஆதலால் அவர்கள் நபிநாயகம் அவர்களின் உபதேசங்களை விரும்பாமல் அவருடன் பகைத்தார்கள். அவரைக் கொல்லவும் முயன்றார்கள்.

அதனுல் நபிநாயகம் அவர்கள் ஓர் இரவு தம் சீடருடன் மக்காவை விட்டு மதினு என்னும் நகரத்துக்குப் பயணமானுர். அரபு மொழியில் பிரயாணம் செய்தல் என்பதற்கு "ஹிஜரத்து" என்னும் சொல் வழிங்குகிறது. நபிநாயகம் அவர்கள் பயணம் செய்த ஆண்டில் இருந்துதான் 'ஹிஜிரி' என்னும் முகம்மதிய ஆண்டு கணக்கிடப்பட்டு வருகின்றது.

9. மதினுவில் வாழ்ந்தவர்கள் நபி அவர்களேப் பற்றி முன்பே கேள்விப்பட்டு இருந்தார்கள். ஆகையால், அவர்கள் அவரை அன்புடன் வரவேற்ருர்கள். அவர் அருள்மொழியைக் கேட்டு இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றினுர்கள். சீக்கிரத்தில் மதினு இஸ்லாமிய நகரமாயிற்று.

10. பின்பு நபி நாயகம் அவர்கள் மக்காவுக்கு வந்தார். அப்போது அங்கிருந்தவர்களும் இஸ்லாமியர் ஆயினர். பத்தாண்டுகளுள் இஸ்லாம் அராபியா முழுவதும் பரவிவிட்டது. இவ்வாறு ஒரு புதிய இயக்கத்தை ஏற்படுத்திய நபிநாயகம் அவர்கள் தமது அறுபத்து மூன்ரும் வயதில் உயிர் நீத்தார். அவருக்குப் பின் அவர் சீடர்கள் பலநாடுகளிலும் சென்று இஸ்லாத்தைப் பரவச் செய்தார்கள்.

| | | |
|---|---|---|
| மதங்கள் | பிறவிக்குணம் | இல்லம் |
| அனுசரித்தல் | அராபியா | தழுவுதல் |
| இஸ்லாம் | தியானம் | உருவங்கள் |
| முஸ்லிம்கள் | ஆழ்ந்திருத்தல் | பாவச் செயல்கள் |
| முகம்மதியர் | தேவதூதர் | முரடர்கள் |
| மக்கா | உபதேசமொழி | சிலே வணக்கம் |
| கிறிஸ்து | நல்லறிவு | இயக்கம் |
| வளர்த்தல் | புகட்டுதல் | உயிர் நீத்தார் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. நமது நாட்டில் அனுசரிக்கப்படும் மதங்கள் எவை ?
2. இஸ்லாம் மதத்தைப் போதித்தவர் யார் ?
3. முகம்மதியர் என அழைக்கப்படுவதேன் •
4. முகம்மது நபி எப்பொழுது அவதரித்தார் ?
5. முகம்மது நபி எவ்விடத்தில் தியானம் செய்தார் ?
6. நபி என்று எப்பொழுது பெயர் பெற்றார் ?
7. நபி என்பதின் பொருள் யாது ?
8. இஸ்லாத்தை முதலில் தழுவியவர் யார் ?
9. நபிநாயகத்தின் உபதேசங்கள் எவை ?
10. " ஹிஜரத்து " குறிக்கும் சம்பவம் யாது ?

**பேச்சு :**

**அடைப்புக் குறிகளுக்குள் உள்ள சொற்களில் பொருத்தமானவற்றை வைத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. இஸ்லாத்தைப் பின்பற்றும் மாந்தர் —— என அழைக்கப்படுவர். (அராபியர், இஸ்லாமியர், மக்காவினர்)

2. முகம்மது நபி அவருடைய பாட்டனரான —— என்பவரால் வளர்க்கப்பட்டார். (முகம்மது, கதீசா, அப்துல் முத்தலிப்பு)

3. —— அவருக்குப் பிறவிக்குணமாய் அமைந்தது. (போதனை, வணக்கம், தெய்வபக்தி)

4. இஸ்லாத்தை முதலில் தழுவிய பெருமை —— அம்மையாருக்கே உரியது. (அமீனு, கதீசா, பேகம்)

**எழுத்து :**

நபிநாயகம் அவர்களின் போதனையை எழுதுக :

# 8. கந்தைத் துணி

(சுய சரிதம்)

1. 'தம்பி, நீ என்னைக் காலால் உதைத்துத் தள்ளுகிறாய். 'உன்மீது குற்றமில்லை. என் நிலையே உன்னை அவ்வாறு செய்யத் தூண்டுகிறது.

" சங்குவெண் டாம ரைக்குத் தந்தைதாய் இரவி தண்ணீர்
அங்கதைக் கொய்து விட்டால் அழுகச்செய் தந்நீர் கொல்லும்
துங்கவெண் கரையிற் போட்டால் சூரியன் காய்ந்து கொல்லும்
தங்களின் நிலைமை கெட்டால் இப்படித் தயங்கு வாரே "

என்பது பெரியார் வாக்கு. ஆகவே, தம் நிலைகெட்ட எவரும் அலட்சியம் செய்யப்படுவது இயல்பு. ஆயினும், என் வரலாற்றைக் கூறுகிறேன் கேள் :




2. யான் சில ஆண்டுகளுக்கு முன் கோயமுத்தூரின் அருகில் ஒரு வயலில் பருத்திச் செடி ஒன்றில் தோன்றினேன். அப்போது நான் வெண்மை நிறத்தோடு விளங்கினேன். பின்னர் சில பெண்கள் என்னையும், என் நண்பர்களையும் பறித்துப் பொதிகளாக்கினார்கள்.

3. அப்பொதிகள், அருகில் இருந்த ஓர் இயந்திரசாலைக்கு அனுப்பப்பட்டன. அங்கு நாங்கள் சில இயந்திரங்களின் உள்ளே செலுத்தப்பட்டோம்.

சிறிது நேரத்தில் நாங்கள் எங்களுடன் இணைபிரியாத் தோழமை பூண்ட விதைகளினின்றும் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு வழியாக வெளியே வந்தோம். அப்பொழுது எங்களுக்குப் **பருத்தி** என்ற பெயர் மாறிப் **பஞ்சு** என்னும் பெயர் வழங்கப்பட்டது.

4. நாங்கள் மறுபடியும் பொதிகளாக்கப்பட்டு மற்றோர் இயந்திரசாலைக்கு அனுப்பப்பட்டோம். அங்கும் நாங்கள் சில இயந்திரங்களின் உள்ளே செலுத்தப்பட்டோம். வெளியே வரும்பொழுது தூய்மையாய் இருந்தோம். எங்கள் மீது ஒட்டிக்கொண்டிருந்த செத்தை, குப்பை, தும்பு தூசு எல்லாம் நீக்கப்பட்டன.

5. பின்னர் நாங்கள் இரண்டு அல்லது மூன்றங்குலக் கனமுள்ள பாய்களைப்போல அழுத்தப் பெற்று வேறு இயந்திரங்களின் உள்ளே திணிக்கப் பட்டோம். அவை எங்களை மெல்லிய இழைகளாக்கிச் சுருணைகளாக்கின.

6. இழைகளாக்கப்பட்ட நாங்கள் பெட்டிகளில் அடைக்கப்பட்டு, மற்றுமோர் இயந்திரசாலைக்கு அனுப்பப்பட்டோம். அங்கு எங்களைப் பலநிறமான சாயங்களில் ஊறவைத்தார்கள். அதன்பிறகு வேறு சில பெரிய இயந்திரங்களின் உதவியால் நாங்கள் துணிகளாக நெய்யப்பட்டோம். அது வரையில் பிரியாமல் இருந்த நாங்கள் பிரிந்து மோட்டார் வண்டிகளிலும், மாட்டு வண்டிகளிலும் ஏற்றப்பட்டுப் பல கடைகளுக்குச் சென்றோம்.

7. தம்பி! யான் ஒரு கடையில் இருந்தபோது தான், உன் தந்தையார் என்னை வாங்கி வந்தார். என்னை அவர் மகிழ்ச்சியுடன் உடுத்துக்கொண்டார். நான் அழுக்கடைந்த போதெல்லாம் என்னை ஒரு

சலவைக்காரனிடம் அனுப்புவார். அவன் என்னை உவர் மண்ணிலிட்டு ஊற வைப்பான்; ஆவியிலிட்டு வேகவைப்பான்; கல்லின் மீது துவைப்பான்; நீரி லிட்டு அலைப்பான்; முறுக்கிப் பிழிவான்; வெயிலில் கட்டி உலர்த்துவான்; தழல் நிறைந்த பெட்டி ஒன்றை என் மீது வைத்து அழுத்துவான். என் அழுக்கைப் போக்கி என்னை வெண்மையாக்க அவன் படுத்திய பாட்டை இப்பொழுது நினைத்தாலும் என் உடல் நடுங்குகிறது.

8. இவ்வாறு உன் தந்தையாரால் பலமுறை உடுக்கப்பெற்று அழுக்கடைந்து, அந்தச் சலவைக் காரன் கையில் அடைந்த துன்பங்களால் நான் கிழி யுண்டேன். சிறு துண்டுகளானேன். உன் தாயார் அத்துண்டுகளுள் ஒன்றான என்னை விளக்குத் துடைக்க உபயோகித்தார். இறுதியில் யான் மிகவும் அழுக்கடைந்து மேலும் கிழியுற்றதால், குப்பை மேட் டில் எறியப்பட்டேன். இப்பொழுது உன் காலால் உதைத்துத் தள்ளப்படுகிறேன். உயர்ந்த நிலையில் இருந்தபொழுது பெட்டியில் வைத்துப் பாதுகாக்கப் பட்டேன். என் நிலை கெட்டபொழுது இப்படிக் கேவலப் படுத்தப்படுகிறேன்! இதுதான் உலக இயல்பு போலும்!

| | | | |
|---|---|---|---|
| தூண்டுகிறது | அலட்சியம் | இயந்திரசாலை | இழைகள் |
| இரவி | வரலாறு | தூய்மை | சுருணைகள் |
| தயங்குவார் | பறித்து | செத்தை | சலவைக்காரன் |
| கலங்குவார் | பொதிகள் | தூசு | அலைப்பான் |
| கொய்து | இணையிலாத | கனம் | கேவலம் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. தம் நிலையில் இழிந்தோர் எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளனர் ?

2. பருத்திக்கும் பஞ்சுக்கும் உள்ள வேற்றுமை என்ன ?

3. பஞ்சு துணியாகும் வரையில் என்னென்ன மாறுதல் அடைகிறது ?

4. சலவைக்காரன் எவ்வாறு அழுக்கை நீக்குகிறான் ?

5. கந்தைத் துணி கேவலமாகக் கருதப்பட்டதேன் ?

**பேச்சு :**

**பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்துக :**

1. தன்னிலை கெட்ட எவரும் அலட்சியம் செய்யப்படுவார்கள்.

2. என்னையும் என் நண்பரையும் பரித்துப் பொதிகளாக்கினார்கள்.

3. அவை எங்களை மெல்லிய இளைகளாக்கிச் சுறுணைகளாக்கின.

4. அவர் என்னை உகர் மண்ணிட்டு ஊர வைப்பான்.

**பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைக்க :**

1. விளங்கினேன் 3. பொதிகள் 5. மறுபடியும்
2. நண்பர் 4. இயந்திரசாலை 6. இணைபிரியாத

**பின்வரும் சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் கூறுக :**

1. அலட்சியம் 4. பெண்கள் 7. உயர்ந்த
2. அருகில் 5. தூய்மை 8. உள்ளே
3. தோன்றியது 6. மெல்லிய 9. துன்பம்

**எழுத்து :**

பஞ்சு துணியாக மாறும் வரையில் உள்ள சரித்திரத்தை எழுதுக.



# 9. தீபாவளி

1. தீபாவளி என்பது இந்துக்கள் கொண்டாடும் விழாக்களுள் ஒன்று. தீபாவளித் தினத்தன்று இந்துக்கள் விடியற் காலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து முழுகுவார்கள். பின்னர் புதிய ஆடைகளை உடுத்துக்கொள்வார்கள். பலவகையான இனிய உணவுப் பொருள்களை உறவினரோடும் நண்பரோடும் இருந்து உண்பார்கள்.

2. தீபாவளி என்றால் சிறுவர் சிறுமியருக்கு அளவற்ற ஆனந்தம் உண்டாகிறது. அவர்கள் அன்று தங்கள் பெற்றோரிடமிருந்து, வாணம், மத்தாப்பு, பட்டாசு முதலிய பொருள்களைப் பரிசாகப் பெறுவார்கள். அவற்றை அவர்கள் அன்று முழுவதும் கொளுத்தி மகிழ்வார்கள். மத்தாப்பு, பட்டாசு முதலியவற்றால் சில சமயங்களில் இன்பத்திற்குப் பதில் துன்பம் உண்டாவதும் உண்டு. கவனமில்லாத பிள்ளைகள் பட்டாசு கொளுத்தும் பொழுது, தங்கள்

கை, கால் முதலிய அவயவங்களையும், ஆடைகளையும் கொளுத்திக் கொள்வதுமுண்டு. ஆதலால், பட்டாசு சுடும் சிறுவர் சிறுமியர் மிகவும் கவனமாயிருத்தல் வேண்டும். பட்டாசு கொளுத்தாமல் இருப்பது மிகவும் நல்லது.

3. தீபாவளியன்று இரவு வீடுகளில் வரிசை வரிசையாய் விளக்குகள் வைத்து அலங்கரிப்பது வழக்கம். இதனாற்றான் இவ்விழாவுக்கு இப்பெயர் வந்தது என்பர். **தீபம்** என்பது விளக்கு ; **ஆவளி** என்பது ஒழுங்கு அல்லது **வரிசை** என்று பொருள் படும். எனவே, தீபாவளி என்னும் தொடருக்கு 'விளக்குகளின் வரிசை' என்பது பொருள்.

4. தீபாவளி விழாக் கொண்டாடுவதற்குக் காரணமான ஒரு புராணக்கதை உண்டு. நெடுங்காலத்திற்கு முன் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா, '**துவாரகை**' என்னும் நகரத்தை ஆண்டுவந்தார். அக்காலத்தில் **சோதிபுரம்** என்னும் பட்டணத்தை ஓர் அசுரன் ஆண்டு வந்தான். அவர் பெயர் **நரகாசுரன்**.

5. அவன் மிகவும் கொடியவன். முனிவர்களின் தவத்தையும், யாகத்தையும் கெடுப்பதே அவன் தொழில். அவன் தன் குடிகளையும் துன்புறுத்தி வந்தான். அவன் செய்து வந்த கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் முனிவர்களும், குடிகளும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடம் முறையிட்டார்கள். தீயோர்களைத் தண்டித்து நல்லோர்களைக் காக்கும் கடமை பூண்ட கருணைநிதியாகிய **திருமால்** நரகாசுரனுடன் போர் புரிந்து அவனைக் கொன்றார். அவன் சாகுந் தருணத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை நோக்கி, "இந்நாட்டவர் ஆண்டுதோறும் யான் இறந்த தினத்தில் விழாக் கொண்டாட வேண்டும்,"

என்று வணக்கமாக வேண்டிக் கொண்டான். அவரும் அதற்கு உடன்பட்டார். அது காரணமாகத் தான் தீபாவளி கொண்டாடப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| இந்துக்கள் | இன்பம் | அவயவங்கள் | முனிவர் |
| உடுத்தல் | துன்பம் | கவனமாய் | குடிகள் |
| உறவினர் | பரிசு | உடன்பட்டார் | கொடுமைகள் |
| வாணம் | கொளுத்தி | புராணம் | கருணாநிதி |
| மத்தாப்பு | பரமாத்மா | யாகம் | தண்டித்து |

## பயிற்சி

**விளக்கம் :**

1. தீபாவளி என்பது என்ன ?
2. தீபாவளி இந்துக்களால் எவ்வாறு கொண்டாடப்படுகிறது ?
3. பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் தீமைகள் யாவை ?
4. தீபாவளி எனப் பெயரமைந்த காரணம் என்ன ?
5. தீபாவளியுடன் சம்பந்தப்பட்ட புராணக் கதை யாது ?
6. திருமாலின் கடமை என்ன ?
7. நரகாசுரன் அரசுபுரிந்த நாட்டின் பெயர் யாது ?
8. நரகாசுரன் எப்படிப்பட்டவன் ?
9. நரகாசுரன் சாகுந்தருணத்தில் திருமாலிடம் யாது கேட்டான் ?

**பேச்சு :**

**பின்வருவனவற்றிலுள்ள பிழைகளைத் திருத்துக :**

1. தீபாவளி என்பது கிறிஸ்தவர்களின் பண்டிகை.
2. தீபாவளி தினத்தன்று மாலையில் எண்ணெய் தேய்த்து முழுகுவார்கள்.
3. அவன் மிகவும் கொடியவர்கள்.
4. அவன் தன் குடிகளையும் துன்புறுத்தி வந்தார்கள்.

**பின்வருவனவற்றுக்கு எதிர்ச்சொற்கள் கூறுக :**

| | | | |
|---|---|---|---|
| 1. நண்பர் | 3. இன்பம் | 5. உபகாரம் | 7. இறந்த |
| 2. சிறுவர் | 4. கொடுமை | 6. நல்லோர் | 8. புதிய |

**எழுத்து :**

தீபாவளி கொண்டாடக் காரணமான புராணக் கதையை எழுதுக.

# 10. சுப்பிரமணிய பாரதியார்

1. நமது தமிழ்நாட்டில் தோன்றிய புலவர் பெருமக்கள் பலர். அவர்களுள் நாட்டின் விடுதலே வேண்டி உணர்ச்சியுடன் கவி பாடியவர் சுப்பிரமணிய பாரதியார்.



2. பாரதியார் திருநெல்வேலியைச் சேர்ந்த எட்டயபுரத்தில் ஏறக்குறைய அறுபத்தொரு ஆண்டுகளுக்கு முன்னே பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சின்னச்சாமி ஐயர். தாயார் பெயர் இலட்சுமி அம்மாள். இவர் பிறந்து ஐந்தாண்டு நிறையு முன்னே இவருடைய அன்னேயார் இறந்து விட்டார். தாயை இழந்த இவரைத் தந்தையார் மிகவும் கவனமாக வளர்த்து வந்தார்.

3. தமிழ்மொழியில் ஆர்வமுள்ள இவரது தந்தையார் இளமையிலேயே இவருக்குத் தமிழ் கற்பித்து வந்தார். பாரதியாரும் தமிழ்ப் பற்றுடையவராக இருந்தார். இளமையிலேயே கவிபாடும் ஆற்றலுடையவராக விளங்கினர். பதினெரு வயது நிரம்பு முன்னரே அறிஞர்கள் கண்டு அதிசயிக்கும்படியான சிறந்த கவிதைகளே எழுதினர். இவரது கல்வியின் சிறப்பையும், கவித்திறத்தையும் கண்ட அறிஞர்கள் இவருக்குப் **பாரதியார்** என்ற பட்டத்தை அளித்தனர்.

4. பாரதியார் தமது பதினைந்தாம் வயதில் மணம் செய்து கொண்டார். அவரது மனைவியின் பெயர் **செல்லம்மாள்**. மணம் நிறைவேறிய அடுத்த ஆண்டில் பாரதியாரின் தந்தையாரும் இறந்து விட்டார். இளமையில் தாயையும் தந்தையையும் இழந்த இவர் உறவினர் ஒருவரின் உதவியால் காசிக்குச் சென்று கல்வி கற்றார். தமிழிலும் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் வல்லவராய் இருந்தார்.

5. இவருடைய கல்விச் சிறப்பை அறிந்த எட்டயபுர மன்னர் இவரை அழைத்துத் தமது அவைக்களப் புலவராக அமர்த்தினார். ஆனால், பாரதியார் நீண்ட நாள் அங்கே இருக்கவில்லை. சென்னைக்கு வந்து **சுதேசமித்திரன்** என்னும் பத்திரிகைக்கு உதவி ஆசிரியரானார்.

6. **இந்தியா, பாலபாரதம்** முதலிய பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்து மக்களுக்குத் தமிழ்ப் பற்றை உண்டாக்கினார். சுதந்திர உணர்ச்சி ததும்ப எழுதினார். தேசீயப்பற்றை மக்கள் உள்ளத்தில் பதிய வைத்தார். அதனால் அப்போதைய அரசாங்கம் அவரைத் துன்புறுத்த நினைத்தது. இதனால் அவர் புதுச்சேரிக்குச் சென்று அங்கே பத்து வருடங்களைக் கழித்தார். மீண்டும் சென்னைக்கு வந்து சுதேசமித்திரன் பத்திரிகைக்கு உதவி ஆசிரியரானார்.

7. இவர் பிறருடைய துன்பத்தைக் கண்டு பொறுக்க மாட்டார். வறுமைத் துன்பத்தால் வாடிய இவர் தமக்குக் கிடைப்பதைப் பிறருக்கு மகிழ்ச்சியுடன் கொடுத்துவிடுவார். ஒருசமயம் தான் உடுத்தியிருந்த உடையைக்கூட ஓர் ஏழைக்குக் கொடுத்து விட்டார். இவர் மிகவும் உயர்ந்த கொள்கைகளை உடையவர்.

8. பாரதியார் ஒப்பற்ற தேசபக்தர். சுதந்திர உணர்ச்சி மிக்கவர்.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே
இச்சகத்து ளோரெல்லாம் எதிர்த்து வந்த போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே."

எனப் பாடி மக்கள் உள்ளத்தில் புத்துணர்ச்சியை உண்டாக்கியவர். இவருடைய பாடல்கள் பண்டி தரும், பாமரரும் படிக்கத் தக்க இனிய எளிய நடை உடையன. சிறந்த ஓசை நயமுமுடையன. இவ ருடைய கட்டுரைகளில், கவிதைகளில் தமிழன்பும் நாட்டுப்பற்றும் சுதந்திர உணர்ச்சியும் நிறைந்து கிடக்கின்றன. இப்பொழுதுள்ள சுதந்திர அர சாங்கம் இவருடைய நூல்களைப் போற்றிக் காக் கின்றது.

9. சிறந்த தேசீய கவியாகிய இவரின் தொண் டால் நாடு விடுதலை அடைந்தது. இவரின் தொண் டைப் பாராட்ட நினைத்த தமிழ்நாட்டு மக்கள் அவர் பிறந்த நாடான எட்டயபுரத்தில் அவரின் ஞாபகார்த்த மாக ஒரு மணிமண்டபம் அமைத்துள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| புலவர் | கவித்திறம் | பத்திரிகை | மணிமண்டபம் |
| பெருமக்கள் | நிறைவேறிய | தேசீயம் | சகத்துளோர் |
| சுதந்திரம் | உறவினர் | தேசீயப்பற்று | புத்துணர்ச்சி |
| ஆர்வமுள்ள | அவைக்களம் | தேசாபிமானம் | ஓசைநயம் |
| தமிழ்ப்பற்று | பாமரர் | தேசபக்தர் | ஞாபகார்த்தம் |

## பயிற்சி

**விளக்கம்:**

1. பாரதியாரின் கவிதைகள் எப்படிப்பட்டன?
2. பாரதியார் பிறந்த ஊர் எது?
3. இளமையில் இவரிடம் காணப்பட்ட ஆற்றல் என்ன?
4. எக்காரணத்தால் இவர் பாரதியார் என அழைக்கப் பட்டார்?

5. பாரதியாரின் மனைவியின் பெயர் என்ன ?

6. பாரதியார் யாருடைய அவைக்களப் புலவராக விளங்கினர் ?

7. பாரதியார் பத்திரிகைகள் மூலம் ஆற்றிய தொண்டு கள் யாவை ?

8. பாரதியார் ஏன் புதுச்சேரிக்குச் சென்ருர் ?

9. பாரதியாரிடம் காணப்பட்ட விசேட குணங்கள் எவை ?

10. தமிழ்நாட்டு மக்கள் இவருடைய ஞாபகார்த்தமாய் யாது செய்தனர் ?

**பேச்சு :**

**ஏற்ற சொற்களை வைத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. பாரதியாருடைய தந்தையார் பெயர் ———.

2. பாரதியார் ——— பிறந்தார்.

3. பாரதியார் ——— கவிபாடும் ——— உடையவராக இருந்தார்.

4. பாரதியார் ——— சிறப்பைக் கண்ட ——— அவருக்குப் ——— என்ற பட்டத்தை ———.

**தடித்த எழுத்துக்களிலுள்ள வார்த்தைகளுக்குப் பதிலாக அதே பொருள் தரும் வேறு வார்த்தைகள் வைத்துக் கூறுக :**

1. பாரதியார் **இளமையிலேயே** கவி பாடினர்.

2. தமது பதினைந்தாம் வயதில் **மணம்** செய்து கொண்டார்.

3. பாரதியார் **தேசீயப்பற்றை** மக்கள் உள்ளத்தில் பதியவைத்தார்.

4. இவர் மிகவும் உயர்ந்த **கொள்கைகளை** உடையவர்.

**எழுத்து :**

பாரதியாரின் சிறப்புகளை எழுதுக.

# 11. ஒற்றுமை

1. தெய்வம் பலபல சொல்லிப்—பகைத்
   தீயை வளர்ப்பவர் மூடர் ;
   உய்வ தனைத்திலும் ஒன்றாய்—எங்கும்
   ஓர்பொரு ளானது தெய்வம்.

2. யாரும் பணிந்திடும் தெய்வம் ;—பொருள்
   யாவினும் நின்றிடும் தெய்வம்;
   பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
   பற்பல சண்டைகள் வேண்டா.

3. வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
   மானுடர் வேற்றுமை இல்லை ;
   எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்—இங்கு
   யாவர்க்கும் ஒன்றெனக் காணீர்.

4. அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
   அத்தனை பேரும் நிகரே ;
   இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
   யாவரும் ஒன்றெனக் கொண்டால்.


திரு. சி. சுப்பிரமணிய பாரதியார்.

# 12. பறவைகளின் சிறப்பியல்புகள்

1. நாம் தினமும் பறவைகளைப் பார்க்கிறோம். பறக்கும் தன்மை உடையது பறவை. பறவையின் உடல் இறகுகளால் மூடப்பட்டிருக்கும். பறவை முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும். நமது நாட்டிலும், பிறநாடுகளிலும் பலவகையான பறவைகள் இருக்கின்றன.




2. பறவைகள் பெரும்பாலும் அழகிய தோற்றமுடையன. அவற்றுள் சில ஆடும் இயல்பும், சில பாடும் தன்மையும், சில கூவும் வழக்கமும் உடையன. ஊன்றிக் கவனித்தால் ஒவ்வொரு பறவையினிடத்தும் ஒவ்வொரு விசேடத் தன்மையைக் காணலாம். நமது நாட்டுப் பறவைகளுள் **மயில், வான்கோழி, புரு** என்பவை தோகை விரித்து நடனம் செய்வதை நாம் பார்த்திருக்கிறோம். அங்ஙனமே **குயில், வானம்பாடி** முதலிய பறவைகள் இனிமையாகப் பாடுவதையும் கேட்டிருக்கிறோம்.



3. **கழுகு, பருந்து** என்பவை வானத்திலே வெகு உயரத்தில் பறக்கும் இயல்புடையன. அவ்வாறு பறந்துகொண்டே தரையின் மீது எங்கேனும் தமக்கு ஏற்ற உணவு இருக்கிறதா என்





பதைக் கவனிக்கும் வழக்கம் உடையவை. இதனால் இவை மிகக் கூரிய பார்வை உடையவை என்பதை அறியலாம்.




4. சில பறவைகள் நெடுந் தூரம் களைப்பில்லாமல் பறந்து செல்லக் கூடியவை. புரு அவ்வினத்தைச் சேர்ந்தது. அதனாலேதான் புருக்களை வளர்த்து அவற்றின் மூலம் ஆங்காங்குச் செய்திகளை அனுப்பி வருகிறார்கள்.

5. **கொக்கு, நாரை** என்பன நீண்ட நேரம் ஒரே இடத்தில் நிற்கும் இயல்புடையன. இவை நீர் நிலைகளில் நெடு நேரம் அசைவற்று நிற்பதால் மீன்கள் இவற்றை உயிரற்ற பொருள்கள் என்றெண்ணி அருகில் வருகின்றன. அப்பொழுது அவை அம் மீன்களைப் பிடித்துத் தின்கின்றன.





6. சில பட்சிகள் அதிகாலையில் விழித்துக்கொள்ளும் தன்மை உடையவை. **சேவலும், காகமும்** அதிகாலையில் விழித்தெழுந்து காலையின் வரவை மாந்தர்க்கு அறிவிப்பவை போலக் கூவுவதையும், கரைவதையும் நாம் அறிவோம்.



7. சில பறவைகள் பருவ காலங்களை அறிந்து மக்களுக்கு அவற்றின் வருகையைத் தெரிவிக்கின்றன. குயில் கூவினால், வசந்த

காலம் வந்துவிட்ட தென்பதை நாம் அறிகிறோம். காகம் கூடுகட்ட ஆரம்பித்தால் குளிர் காலத்தின் வருகையைத் தெரிந்து கொள்கிறோம்.

8. உலகத்தில் உள்ள பறவைகளுள் பெரியது தீக்கோழி. அஃது ஆபிரிக்காக் கண்டத்தின் தென் பகுதியில் வசிக்கிறது. அது நெருப்பைத் தின்ன வல்லது. ஏறக்குறைய எட்டடி உயரம் உடையது. அதனால் பறக்க முடியாது. ஆனால், குதிரையை விட வேகமாக ஓடவல்லது. அதன் முட்டை மிகவும் பருமனாயிருக்கும்.

9. இவ்வாறு உலகில் எத்தனையோ விநோத மான பறவைகளை இறைவன் படைத்துள்ளார். அப் பறவைகள் யாவும் மாந்தர்க்குப் பலவகைகளில் பயன் படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| இறகுகள் | அசைவற்று | பருவகாலம் | விநோதம் |
| விசேடமான | உயர்ந்த | கூவுவது | தோகை |
| தன்மை | விழித்து | சிறப்பியல்பு | ஆங்காங்கு |
| களைப்பு | மாந்தர் | கண்டம் | செய்திகள் |
| தோற்றம் | கரைவது | பருமன் | பயன்படுதல் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. பறவையின் பொதுத் தன்மைகள் யாவை?
2. நமது நாட்டிலுள்ள ஆடும் பறவைகள் யாவை?
3. பருந்தின் சிறப்பியல்புகள் எவை?
4. புறாக்களின் உபயோகம் என்ன?
5. நாரை, கொக்கு என்பன நீர்நிலைகளில் அசைவற்று நிற்கும் காரணம் என்ன?
6. பருவ காலங்களை அறிவிக்கும் பறவைகள் யாவை?
7. தீக்கோழியைப் பற்றி நீ யாது அறிவாய்?

பேச்சு :

தடித்த எழுத்துக்களால் ஆகிய சொற்களுக்குப் பதிலாக அதே பொருள் தரும் பிற சொற்களை வைத்துக் கூறுக :

1. **பறவைகள்** அழகானவை.

2. பறக்கும் **தன்மை** உடையது பறவை.

3. **பெரும்பாலும்** பறவைகள் உயரப் பறக்கும் **இயல்** புடையன.

4. பருந்து **வானத்தில்** வெகு உயரத்தில் பறக்கும்.

பின்வரும் வாக்கியங்களைச் சேர்த்துக் கூறுக :

1. பறவை என்பது யாது? பறக்கும் தன்மை உடையது பறவை.

2. சில ஆடும் தன்மை உடையவை. சில பாடும் தன்மை உடையவை.

3. பறவைகள் நமக்குப் பயன்படுகின்றன. நாம் அவற்றிடம் அன்பாய் இருக்கவேண்டும்.

பின்வருவனவற்றிற்கு எதிர்ப்பதங்கள் கூறுக :

| | | |
|---|---|---|
| 1. பெரும்பான்மை | 3. விரித்து | 5. அசைவற்று |
| 2. அழகிய | 4. நீண்ட | 6. உற்பத்தி |

எழுத்து :

தீக்கோழியைப் பற்றி அறிந்தவற்றை எழுதுக.



# 13. கிறிஸ்து மகானும் அவர் சீடர்களும்

1. உலகத்தில் வழங்கும் மதங்களுள் கிறிஸ்தவ மதமும் ஒன்று. அதை ஏற்படுத்தியவர் கிறிஸ்து என்னும் ஒரு மகான். அவர் இயேசுநாதர் என்றும் அழைக்கப்படுவர். அவர் ஒரு நாள் தம் சீடர்களுடன் 'எருசலேம்' என்னும் பட்டணத்துக்குச் சென்றார். அங்கு அவர் ஒரு வீட்டில் விருந்துக்கு அழைக்கப்பட்டார்.

2. அக்காலத்தில் சாப்பாட்டுக்கு முன் விருந்து அளிப்பவர், விருந்தினரின் பாதங்களைத் தம் ஆட்களைக்கொண்டு கழுவித் துடைத்துவிடுவது வழக்கம். விருந்தினரே ஒருவர் மற்றவர் பாதங்களைக் கழுவி விடுவதும் உண்டு.

3. இயேசுநாதர் விருந்துக்குச் சென்ற வீட்டில்

வேலையாட்கள் இல்லை. இயேசுநாதரின் சீடர்கள் அதை அறிந்தும், ஒருவர் மற்றொருவரின் பாதங்களைக் கழுவிவிட விரும்பவில்லை. ஒவ்வொருவரும் ‘மற்றொருவரின் பாதங்களை நாம் கழுவுவதா ?’ என்றெண்ணி வாளாவிருந்தனர்.

4. அவர்களுடைய செருக்கைக் கண்ட கிறிஸ்து மகான், அவர்களுக்குப் புத்தி புகட்ட எண்ணினார். தம் இருக்கையை விட்டெழுந்தார் ; அந்த அறையின் ஒரு மூலையில் இருந்த தண்ணீர்ப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டார். தம் சீடர்களுள் ஒருவரான பேதுரு என்பவரின் அருகே சென்றார். இயேசு தம் பாதங்களைக் கழுவ வருவதைக் கண்ட பேதுரு, “ஆண்டவரே ! நீர் என் பாதங்களைக் கழுவுதல் நியாயமன்று ; இதற்கு நான் சம்மதிக்க மாட்டேன்,” என்றார்.

5. இயேசுநாதர் “அன்பரே ! நாம் இருவரும் சுக துக்கங்களில் இணைபிரியாத நண்பர்கள் அல்லவா ? நீர் எனது பணியை ஏற்றுக்கொள்ளாவிடில் பிற்காலத்தில் நீர் எவ்வாறு என்னோடு பங்கு பெறுதல் கூடும் ?” என்று கூறினார்.

6. அது கேட்ட பேதுரு “ஆண்டவரே ! உம்முடன் இருந்து பிற்காலத்தில் யான் பெறக்கூடிய சிறந்த பங்கை நான் இழக்க விரும்பவில்லை. ஆதலால், உமது விருப்பப்படியே செய்யும்,” என்று சொன்னார்.

7. இயேசுநாதர் தம் சீடர் எல்லோருடைய பாதங்களையும் அன்புடன் அலம்பித் துடைத்துவிட்டுத் தம் இருக்கையில் அமர்ந்தார். பின்னர் தம் சீடர்களை நோக்கி, “அன்பர்களே! யான் கூறுவதைக் கவனியுங்கள். உலகில் மக்களாய்ப் பிறந்த நாம்

நமது நலத்தைக் கருதக்கூடாது. பிறர் நலத்தைக் கருதிப் பணி செய்வதே மோட்சம் அடையும் வழி. அடியார்க்கு அடியராய் நாம் இருக்கப் பழக வேண்டும்,'' என்று கூறி முடித்தார். இப் பொன் மொழிகளை நாமும் மனத்தில் வைத்து நடத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மகான் | செருக்கு | இழக்க | நியாயம் |
| பாதங்கள் | புத்தி புகட்ட | அலம்பி | சம்மதி |
| கவனித்தல் | இருக்கை | பங்கு | பழகுதல் |
| விருந்து | இணைபிரியாத | அமர்ந்து | பொன்மொழி |
| வாளாவிருத்தல் | பணி | மோட்சம் | அடியார் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. கிறிஸ்தவ மதத்தை ஏற்படுத்தியவர் யார் ?
2. கிறிஸ்துநாதரும் சீடர்களும் எங்கே சென்றனர் ?
3. விருந்தினருக்குச் செய்யும் உபசாரம் என்ன ?
4. சீடர்களிடம் காணப்பட்ட செருக்கு யாது ?
5. இயேசுநாதர் தம் சீடர்களுக்கு எவ்வாறு புத்தி புகட்டினர் ?
6. இயேசுநாதர் கூறிய பொன்மொழிகள் யாவை ?

**பேச்சு :**

**அடைப்புக் குறிகளுக்குள் உள்ள சொற்களில் பொருத்தமானவற்றைத் தெரிந்து கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. கிறிஸ்தவ மதத்தை ஏற்படுத்தியவர் —— என்னும் ஒரு மகான். (முகம்மது, புத்தர், கிறிஸ்து)
2. கிறிஸ்து மகான் தம் சீடர்களுடைய —— அறிந்தார். (பணிவை, அன்பை, செருக்கை)
3. நீர் எனது —— ஏற்றுக்கொள்ள வேண்டும் (பங்கை, பணியை, அறிவை)
4. பிற்காலத்தில் யான் பெறக்கூடிய சிறந்த பங்கை —— விரும்பவில்லை. (நிறுத்த, எடுக்க, இழக்க)

**பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைக்க :**

| | | |
|---|---|---|
| 1. விருந்து | 3. பணி | 5. நியாயம் |
| 2. செருக்கு | 4. மோட்சம் | 6. அடியார் |

**எழுத்து :**

இயேசுநாதர் தம் சீடர்களுக்குக் கற்பித்த பொன்மொழிகளை எழுதுக.




# 14. கொழும்பு நகரம்

1. நாம் இலங்கையில் வசிக்கிறோம். இலங்கை நமது தாய்நாடு. இது ஓர் அழகான தீவு. இத்தீவின் மேற்குக் கடற்கரை ஓரத்திலே கொழும்பு நகரம் இருக்கின்றது. இது இலங்கையிலுள்ள மிகப் பெரிய நகரமாகும். போர்த்துக்கீசர் இலங்கையை ஆண்ட காலம் முதல் இந்நகரமே இலங்கையின் தலைநகராக விளங்குகின்றது.

2. கொழும்பு ஒரு துறைமுக நகராகும். மேலைத் தேசங்களில் இருந்து, கீழைத் தேசங்களுக்குச் செல்லும் கப்பற்பாதையின் மத்தியில் இந்நகரம் அமைந்துள்ளது. இதனால் நாள்தோறும் வெளிநாட்டுக் கப்பல்கள் இங்கே வந்து தங்கிப் போகின்றன. இக்கப்பல்கள் தமக்குத் தேவையான கரி, தண்ணீர் முதலியவைகளை இங்கிருந்து எடுத்துச் செல்கின்றன. கப்பல்களின் போக்குவரவுக்கு அனுகூலமாக இங்கு ஒரு **கலங்கரை விளக்கம்** அமைக்கப்பட்டுள்ளது. கொழும்பு உலகத்திலேயே ஒரு சிறந்த துறைமுகமாக மதிக்கப்படுகின்றது.

3. இந்நகரில் உலகத்திலுள்ள பல்வேறு தேசங்களைச் சேர்ந்த மக்கள் வாழுகிறார்கள். இதனால் பல தேச மக்களின் பழக்கவழக்கம், பேச்சு, நாகரிகம் என்பவற்றை இந்நகரில் பார்க்கலாம். இந்நகரத்தின் வீதிகளிலும் வர்த்தக நிலையங்களிலும் எப்பொழுதும் வெளிநாட்டு மக்கள் சுற்றி வருவதையும், பொருள்களுக்கு விலை பேசுவதையும், அவற்றை விலைக்கு வாங்குவதையும் காணலாம்.

4. அழகிய உயர்ந்த பல கட்டடங்கள் இந்நகரில் நிறைந்து விளங்குகின்றன. பெரிய வர்த்தக



நிலையங்களும் அரசாங்க அலுவலகங்களும், தொழிற்சாலைகளும், பொருட்காட்சிச் சாலைகளும், அழகான பல பூங்காக்களும் நகரை அழகுபடுத்துகின்றன. நகரின் பல பகுதிகளிலும் நீண்ட பல வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. சந்திகள் தோறும் ஊர்திகளின் போக்குவரத்தைத் தாமே ஒழுங்குபடுத்தும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

5. கொழும்பில், துறைமுகத்தை அடுத்த பகுதி

**கோட்டை** என அழைக்கப்படுகின்றது. இப்பகுதியில் அரசாங்க அலுவலகங்களும் சிறந்த வர்த்தக நிலையங்களும் உண்டு. இதனை அடுத்த பகுதி **புறக் கோட்டை** என அழைக்கப்படுகின்றது. இவ்விடத்தில் வர்த்தக நிலையங்களும், பஸ்வண்டி நிலையங்களும் உண்டு. இங்கு எப்பொழுதும் மக்கள் நடமாட்டமும் வாகனப் போக்குவரத்துகளும் மிகவும் நெருக்கமாகக் காணப்படுகின்றன. இவ்விடத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் மக்களின் தேவைக்குரிய சகல பொருள்களும் கிடைக்கும்.

6. கொழும்பு நகர நிர்வாகம் இந்நகரத்திலுள்ள **மாநகரசபையின்** கீழ் உளது. மாநகர சபையில் நகரின் பல பகுதிகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் உளர். இவர்கள் தத்தம் பகுதிகளிலுள்ள குறை நிறைகளைக் கவனித்து வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்விப்பார்கள். மாநகர சபையின் நிர்வாகத்தின்கீழ் இந்நகரம் மிகவும் சுத்தமாகவும், அழகாகவும் விளங்குகின்றது. இச்சபையின் அலுவலகம் '**விக்ரோறியா**' நந்தவனத்தின் அயலில் உள்ளது.

7. கோட்டையின் தென்புறத்தே பாராளுமன்றக் கட்டிடத்தின் அண்மையில் கடற்கரையை அடுத்து ஒர் அழகிய மைதானம் இருக்கின்றது. அது '**காலிமுகம்**' என அழைக்கப்படுகின்றது. வர்த்தக நிலையங்களிலும், தொழில்களிலும், வீடுகளிலும், பகல் முழுவதும் இருந்த மக்கள் சிரம பரிகாரம் செய்வதற்கு மாலைக் காலத்தில் பல்லாயிரக் கணக்கில் இம் மைதானத்திற்கு வருவார்கள். இங்கு வீசும் மனோகரமான காற்று உடலுக்கு இன்பத்தை ஊட்டி, உள்ளத்திற்கும் உற்சாகத்தை அளிக்கின்றது.

8. கொழும்பு நகரம் புகையிரதப் பாதைகளினுலும், நீண்ட பல வீதிகளினுலும் இலங்கையின் எல்லாப் பாகங்களுடனும் தொடுக்கப்பட்டுளது. இலங்கையின் மிகப் பெரிய புகையிரத நிலேயமும் இந்நகரத்திலேயே உண்டு. அந்நிலேயம் **கோட்டை** என அழைக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| நகரம் | கலங்கரைவிளக்கம் | நிர்வாகம் |
| தலேநகர் | கட்டடங்கள் | மாநகரசபை |
| துறைமுகம் | அலுவலகம் | பிரதிநிதிகள் |
| மேலேத்தேசம் | தொழிற்சாலே | குறைநிறை |
| கீழைத்தேசம் | வர்த்தக நிலேயம் | நந்தவனம் |
| கப்பற்பாதை | ஊர்திகள் | பாராளுமன்றம் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. கொழும்பு நகரம் எங்கே உள்ளது ?
2. கொழும்பு சிறந்த துறைமுகமாக விளங்குவதற்குரிய காரணங்கள் எவை ?
3. கொழும்பு நகரிலுள்ள காட்சிகள் யாவை ?
4. புறக்கோட்டைப் பகுதியைப் பற்றி யாது அறிவீர் ?
5. கொழும்பு நகர நிர்வாகம் எவ்வாறு நடைபெறுகின்றது ?
6. 'காலிமுகம்' எங்கே உள்ளது ? அதன் சிறப்பு யாது ?

**பேச்சு :**

**பொருத்தமான சொற்களே வைத்துக் கோடிட்ட இடங்களே நிரப்புக :**


1. இலங்கை ஓர் அழகான ——.
2. இலங்கையின் —— கடற்கரை ஓரத்தில் —— நகரம் இருக்கிறது.
3. கொழும்பு நகர —— இந்நகரத்திலுள்ள —— யின் கீழ் உள்ளது ?

**பின்வரும் சொற்களின் பொருள் விளங்க வாக்கியங்கள் அமைக்க :**

1. துறைமுகம் 2. கலங்கரை விளக்கம்
3. அலுவலகம் 4. ஊர்தி

**எழுத்து :**

காலிமுக மைதானம் பற்றி அறிந்தவற்றை எழுதுக.



# 15. கடிதத்தின் பிரயாணம்

1. பிள்ளைகளே! நம்மில் அநேகர் தபாற் காரனை எதிர்பார்க்கிறோம். மேலே உள்ள படத்தைப் பாருங்கள். தபாற்காரன் அந்தச் சிறுவர்களிடம் தபால் கொடுக்கிறான்.

2. அச்சிறுவர்கள் தமது தந்தையாரிடம் இருந்து கடிதம் வருமென எதிர்பார்த்திருந்தார்கள். தூரத்தில் தபாற்காரன் வருவதைப் பார்த்ததும் அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். தங்க ளுக்கும் கடிதம் வருமென எண்ணினார்கள். அவ் வாறே அவர்களுக்கும் ஒரு கடிதம் கிடைத்தது.

3. அக்கடிதம் எவ்வாறு அவர்களுக்கு வந்து சேர்ந்தது என அறிவீர்களா? அவர்களுடைய தந்தையார் கொழும்பில் இருக்கிறார். அவர், தான் எழுதிய கடிதத்தை ஓர் உறையினுள் இட்டு உறை யின் மேற்புறத்தில் விலாசம் எழுதி முத்திரை ஒட்டிச் சமீபத்தில் இருந்த தபாற் பெட்டியினுள் போட்டார். இவ்வாறே மற்றவர்களும் தாம் அனுப்பவேண்டிய

கடிதங்களே அப்பெட்டியினுள் போடுவர். அக்கடிதங்கள் தபாற்காரன் ஒருவனுல் பெட்டியில் இருந்து எடுக்கப்பெற்றுப் பெரிய தபாற் கந்தோருக்குக் கொண்டு செல்லப்படும்.

4. • பெரிய தபாற் கந்தோரில் முத்திரை விற்றல், காசு கொடுத்தல், காசு வாங்கல், கடிதங்களே வெவ்வேருகப் பிரித்தல் முதலிய பல வேலேகள் நடைபெறுகின்றன. இவ்வேலேகளேக் கவனிப்பதற்காக அங்கே, அநேக ஊழியர்கள் இருக்கிருர்கள். தபாற் கந்தோரில் பெரிய உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ்ப் பல தபாற் பெட்டிகளில் இருந்தும் எடுத்துக் கொண்டு வரப்பட்ட கடிதங்களுக்கெல்லாம் தபாற் கந்தோரின் பெயரும் திகதியும் உடைய அடையாளம் பொறிக்கப்படும்.

5. பின்னர், அக்கடிதங்கள் மேலுறைகளில் குறிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு அனுப்புவதற்காக வெவ்வேருகத் தெரிவு செய்யப்படும். ஒவ்வோர் ஊர்களுக்கும் உரிய எல்லாக் கடிதங்களேயும் ஒவ்வொரு பைகளின் உள்ளே போட்டுக் கட்டுவார்கள். தபாற் பைகள் நன்கு கட்டப்பட்டு மெழுகிட்டு முத்திரைகளிடப்படும். அப்பைகள் புகைவண்டி, மோட்டார் வண்டி, நீராவிக் கப்பல், ஆகாயக் கப்பல் முதலியவற்றின் மூலம் போய்ச் சேரவேண்டிய ஊர்களுக்கும் தேசங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. அவைகள் அங்கே உள்ள தபால் நிலேயங்களுக்குப் போய்ச் சேர்கின்றன.

6. தபாற் கந்தோரில், தபாற் கந்தோர் அதிபரின் மேற்பார்வையில் தபாற் பைகள் பிரிக்கப்பட்டுத் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்யப்பட்ட கடிதங்கள் தபாற்காரர் மூலம் உரியவர்களிடம் சேர்க்

கப்படுகின்றன. தூரமான இடங்களில் இருந்து அனுப்பப்படும் கடிதங்கள் இவ்வாறே பிரயாணம் செய்து நமக்குக் கிடைக்கின்றன.

| | | |
|---|---|---|
| தபாற்காரன் | உத்தியோகத்தர் | முத்திரை |
| தந்தையார் | அடையாளம் | தபாற்பைகள் |
| நினைத்தார்கள் | பொறிக்கப்படும் | அதிபர் |
| உறையினுள் | மேலுறை | மேற்பார்வை |
| சமீபத்தில் | வெவ்வேறு | உரியவர்கள் |
| தபாற்கந்தோர் | தபால்கள் | தூரமான |
| ஊழியர்கள் | மெழுகு | தெரிவுசெய்தல் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. நமக்குரிய தபால்களை நம்மிடத்தில் சேர்ப்பவர் யார் ?
2. சிறுவர்கள் ஏன் மகிழ்ச்சி அடைந்தனர் ?
3. சிறுவர்களின் தந்தையார் தாம் எழுதிய கடிதத்தை யாது செய்தார் ?
4. பெரிய தபாற்கந்தோரில் நடைபெறும் தொழில்கள் எவை ?
5. தபாற்பைகள் எவற்றின் மூலம் பிறநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன ?
6. நீர் எழுதும் ஒரு கடிதத்தின் பிரயாணத்தை விளக்குக.

**பேச்சு :**

பின்வரும் தடித்த எழுத்துக்களால் ஆகிய சொற்களுக்குரிய பொருள் தரும் பிறசொற்களை வைத்து வாக்கியங்கள் அமைக்க :

1. அவர்களுடைய **தந்தையார்** கொழும்பில் இருக்கிறார்.
2. சிறுவர்கள் **கடிதம்** வருமென எதிர்பார்த்தார்கள்.
3. அவர்கள் மிகவும் **மகிழ்ச்சி** அடைந்தார்கள்.
4. தபாற் கந்தோரில் அநேக **ஊழியர்கள்** இருக்கின்றார்கள்.
5. கடிதங்கள் இவ்வாறே **பிரயாணம்** செய்கின்றன.

பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் ஆக்குக :

| | | | |
|---|---|---|---|
| 1. சமீபத்தில் | 3. முத்திரை | 5. தூரம் | 7. ஊர் |
| 2. அடையாளம் | 4. தபாற்காரன் | 6. அதிபர் | 8. தேசம் |


**எழுத்து :**

தூரத்தில் உள்ள உமது நண்பரால் எழுதப்பெற்ற கடிதம் எவ்வாறு உமக்குக் கிடைத்தது என எழுதுக.

TB
031(4)
N56



86817



# 16. வானவூர்தி

1. தற்காலத்தில் அமைந்துள்ள புதிய பிரயாண சாதனங்களில் வானவூர்தியும் ஒன்று. மாட்டு வண்டி, புகை வண்டி, மோட்டார் வண்டி என்பன தரையில் ஓடுகின்றன. நீராவிக்கப்பல் கடலில் ஓடுகின்றது. வானவூர்தி வானத்தில் பறந்து செல்லுகின்றது. அதனால் அதனை 'ஆகாய விமானம்,' என்றும் ஆகாயக் கப்பல் என்றும் அழைப்பர். சில சமயங்களில் அது நிலத்திலும் நீரிலும் செல்கிறது.

2. வானவூர்தி மூலம் பல்லாயிரக் கணக்கான மைல் தூரத்தைச் சில மணித்தியாலங்களில் கடந்து விடலாம். வானவூர்தி சராசரியாக மணித்தியாலம் இருநூற்றைம்பது அல்லது முந்நூறு மைல் பறந்து செல்லும். தற்காலத்தில் மணித்தியாலம் ஆயிரம் மைல் வீதம் பறந்து செல்லும் ஊர்திகளும் இருக்கின்றன. மக்கள் வானவூர்தி மூலம் பிரயாணம் செய்

வதால் தங்கள் அருமையான நேரத்தை ஆதாயப் படுத்திக் கொள்கிருர்கள்.

3. வானவூர்திகள் யுத்தம் நடைபெறும் காலங் களில் மிகவும் பிரயோசனப்படுகின்றன. பல இடங் களுக்கும் போர் வீரர்களை ஏற்றிக்கொண்டு சென்று இறக்குகின்றன. குண்டுகளை ஏற்றிச் சென்று பகை வர் நாடுகளில் வீசப் பயன்படுகின்றன.

4. வானவூர்தி வானவெளியில் ஏறக்குறையப் பதினையாயிரம் அடி உயரம் வரையில் பறந்து செல்லும். அது தரையில் இறங்கும்பொழுதும், உயர எழும்பும் பொழுதும் பூமியில் சிறிது தூரம் வேகமாய் ஓடிச் செல்லும். அதற்காக வானவூர்தியின் முன் புறத்தில் இரண்டு சிறு சில்லுகள் இருக்கின்றன.

5. வானவூர்தி பாரமற்ற இலேசான உலோகத் தகட்டினுல் செய்யப்படுகின்றது. அதன் முன் பாகத் தில் இரண்டு உறுப்புகள் இருக்கின்றன. அவை அதிகம் வேகமாகச் சுழலக் கூடியன. வானவூர்தி யின் நடுப்பாகம் பருமனுகவும், முன்பாகம் சிறுத்தும் பின் பாகம் நீளமாகவும் இருக்கின்றது. அது உயரத் தில் பறந்து செல்லும்பொழுது ஒரு பறவையைப் போலத் தோன்றும்.

6. வானவூர்தியின் நடுப்பாகத்தில் பிரயாணி கள் இருப்பதற்கு வசதியான ஆசனங்கள் அமைக் கப்பட்டிருக்கின்றன. முன்பாகத்தில் இயந்திரங்கள் இருக்கின்றன. இயந்திரம் ‘பெற்ரேல்’ எனப்படும் நில எண்ணெயால் இயங்குகின்றது. சாரதி இயந் திரத்தை இயக்கியதும், முன்புறத்திலுள்ள உறுப் புகள் வேகமாகச் சுழல்கின்றன. அப்பொழுது ஊர்தி மேலே எழுந்து படிப்படியாய் உயர்ந்து செல் கிறது.

7. வானவூர்திகள் அமெரிக்கா, ஐரோப்பா, முதலிய தேசங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இக்காலத்தில் பிரயாணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய வானவூர்திகளையும், யுத்தகாலங்களில் உபயோகிக்கக் கூடிய வானவூர்திகளையும் பெரும்பாலும் உற்பத்தி செய்கிறார்கள்.

8. நமது நாட்டில் மக்கள் பிரயாணம் செய்யவும், தபால் கொண்டு செல்லவும் வானவூர்திகள் பயன்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| வானவூர்தி | தற்காலம் | குண்டுகள் | இயக்குதல் |
| சாதனங்கள் | ஊர்திகள் | வானவெளி | படிப்படியாய் |
| நீராவிக்கப்பல் | ஆகாயம் | சில்லுகள் | உற்பத்தி |
| ஆகாயவிமானம் | பிரயோசனம் | உலோகம் | பிரயாணிகள் |
| ஆகாயக்கப்பல் | போர்வீரர் | ஆசனங்கள் | பயணப்படுதல் |

## பயிற்சி

**விளக்கம்:**

1. தற்காலத்திலுள்ள பிரயாண சாதனங்கள் எவை?
2. வானவூர்திக்குரிய மறுபெயர்கள் யாவை?
3. வானவூர்தி என்னும் பெயருக்குரிய காரணம் என்ன?
4. வானவூர்தியின் சராசரி மணிக் கெதி யாது?
5. வானவூர்திகள் யுத்த காலத்தில் எவ்வாறு பயன்படுகின்றன?
6. வானவூர்தியின் முன்புறத்தில் அமைந்துள்ள சில்லுகளின் உபயோகம் என்ன?
7. வானவூர்தி எவ்வாறு அமைந்திருக்கிறது?
8. வானவூர்திகளை உற்பத்தி செய்யும் நாடுகள் யாவை?

**பேச்சு:**

**பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்துக:**

1. நீருவிக் கப்பல் கடலில் ஒடுகிண்றது.
2. வானவூர்தி மணித்தியாலம் முந்நூறு மயில் பரந்து செல்லும்.

3. வானவூர்தியின் நடுப்பாகத்தில் பிராணிகள் இருப்பதற்கு வசதியான ஆசனங்கள் உண்டு.

4. வானவூர்தி தறையில் இரங்கும் பொழுது ஆறுதலாய் இரங்கும்.

5. இயந்திரத்தை இசக்கியதும் முன்புரத்திலுள்ள உருப்புகள் வேகமாகச் சுழல்கின்றன.

அடைப்புக்குறிகளுக்குள் உள்ள சொற்களில் பொருத்தமானவற்றைத் தெரிந்து கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. வானவூர்தி —— பறக்கிறது (தரையில், கடலில், வானவெளியில்)

2. இயந்திரம் நில நெய்யால் —— (எரிகின்றது ; எழும்புகின்றது, இயங்குகின்றது)

3. வானவூர்தியின் நடுப்பாகத்தில் பிரயாணிகள் —— வசதியான ஆசனங்கள் உண்டு (படுப்பதற்கு, இருப்பதற்கு, சாய்வதற்கு)

4. வானவூர்தி வானவெளியில் —— பதினையாயிரம் அடி உயரம் வரை பறக்கிறது (கூடக்குறைய, ஏற இறங்க, ஏறக்குறைய)

எழுத்து :

வானவூர்தியின் உபயோகங்களை எழுதுக.

# 17. குலம் பெரிதா, குணம் பெரிதா?

1. நெடுங்காலத்திற்கு முன் **மலயமான்** என்னும் ஒரு மன்னர் இருந்தார். அவருக்கு ஒரு புதல்வன் இருந்தான். அவன் தான் உயர் குலத்திற் பிறந்தவன் என்றும், உயர் நிலையில் இருப்பவன் என்றும் பெருமை கொண்டான். அதனால் அவன் பிற குலத்தவரையும், ஏழைகளையும் மிகவும் இழிவாக நடத்தி வந்தான்.

2. இத்தகைய இழிகுணம் படைத்த தன் புதல்வனை எப்படியாவது நல்வழிப்படுத்த வேண்டும் என்று அவன் தந்தையார் விரும்பினர். அதற்குரிய தருணத்தை அவர் எதிர்பார்த்திருந்தார். இளவரசன் அயல்நாடு சென்றிருந்தபோது அவனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. உடனே இளவரசனுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. அவனும் சீக்கிரமாகத் திரும்பி வந்தான்.

3. அவன் வருவதற்கு முன்பே, மகனுடைய குழந்தை போன்ற மற்றொரு மகவை மன்னர் தேடித் தம் அரண்மனையில் வைத்திருந்தார். அம்மகவு மிகவும் எளிய குடும்பத்திற் பிறந்தது. தம் மைந்தன் வந்து விட்டதை அறிந்த மன்னர், இரு குழந்தைகளையும் ஒரே மாதிரி அலங்கரித்து ஒரே தொட்டிலில் இடச் செய்தார்.

4. குழந்தையைக் காண விரும்பிய அரச குமாரன், அந்தப்புரம் சென்றான். அங்கு இரண்டு குழந்தைகள் இருக்கக் கண்டான். தன் மகவு எது என்பது தெரியாமல் திகைத்து நின்றான். அப்போது அரசர் அங்கே வந்தார். திகைத்து நின்ற தம் புதல்வனைப் பார்த்து, அவர், “உயர்ந்த இரத்தமும்,

மேன்மையான அந்தஸ்தும் உடைய உன் குழந்தையை நீ கண்டுகொள்ள முடியவில்லையா? ஏன் மயங்கி நிற்கிருய்?'' என்று கேட்டார்.

5. அரச குமாரன் விடைகூற முடியாமல் நின்ருன். உடனே அரசர், ''அப்பா, நீ எப்பொழுதும் உயர்ந்த குலத்தையும், மேலான அந்தஸ்தையும் சிறந்தவையென மதித்துக் கர்வமடைந்தாய். உயர் குலத்தில் உதித்த உன்னுடைய பிள்ளைக்கும், அதனுடன் கிடக்கும் தாழ்குலத்தில் பிறந்த மற்றப் பிள்ளைக்கும் என்ன வேற்றுமை கண்டாய்? இப்பொழுது வேருெருவர் காட்டாவிட்டால் உனது குழந்தையை நீ அறிந்து கொள்ள முடியாதல்லவா? ஆதலால், உலகில் குலம் பெரியதன்று; **குணமே பெரியது.** இச்சிறந்த நீதியை நீ அறியவேண்டும் என்றே யான் இவ்வாறு செய்தேன். இனியாவது நீ நற்புத்தியுடன் நடந்துகொள்,'' என்று கூறிஞர்.

6. அன்று முதல் அரசகுமாரன் தன் கர்வத்தை ஒழித்து, எல்லோரையும் சமமாகப் பாவித்து நடந்து வரலாஞன்.

| | | | |
|---|---|---|---|
| நெடுங்காலம் | சீக்கிரம் | திகைத்து | வேற்றுமை |
| இழிகுலம் | மகவு | அந்தஸ்து | தாழ்குலம் |
| இழிவு | அந்தப்புறம் | கர்வம் | இளவரசன் |

### பயிற்சி

**விளக்கம் :**

1. இளவரசனிடம் காணப்பட்ட குறை யாது?
2. அரச குமாரன் ஏன் திகைத்து நின்ருன்?
3. திகைத்து நின்ற இளவரசனைப் பார்த்துத் தந்தையார் என்ன கேட்டார்?
4. இக்கதை நமக்குப் போதிக்கும் நீதி என்ன?

**பின்வருவனவற்றிற்கு எதிர்ச் சொற்கள் கூறுக :**

1. பெருமை 2. உயர்ந்த 3. வேற்றுமை 4. நீதி

**எழுத்து :**

மன்னன் தன் மகனுக்குக் கூறிய நற்புத்திகளை எழுதுக.

# 18. கரிகாற் சோழன்

1. செந்தமிழ் நாடு **சேரர், சோழர், பாண்டியர்** என்னும் மூவேந்தராலும் பண்டைக் காலத்தில் அரசாளப்பட்டது. அவர்கள் அறநெறி தவருது அரசாட்சி செய்தனர். தன்னுயிர் போலப் பிற உயிரையும் பேணிக்காத்தனர். அதனுல் அவர்கள் சிறப்பு என்றும் நிலவுவதாயிற்று.

2. பண்டைத் தமிழ் மன்னர்களுள் **கரிகாற் சோழன்** ஒருவனுவான். இவன் இளமைப் பருவத்திலேயே தன் தந்தையை இழந்தான். தன் தந்தைக்குப் பின்னர் இவனே அரசனுகும் உரிமை உடையவன். ஆனுல், அக்காலத்தில் நாட்டில் தோன்றிய குழப்பத்தால், இவன் ஊரை




விட்டகன்று கருவூரில் சென்று வசித்து வந்தான்.

3. சில காலம் சென்ற பின்னர் இவன் தன் அரசுரிமையைப் பெற்ருன். அப்பொழுது பகைவர் இவனைச் சிறைப்படுத்தி, நகரைத் தீயிட்டனர். கரிகாலன் சிறையினின்றுந் தப்பிச் சென்று தன் மாமனின் துணையோடு பகைவரை அழித்து அரசனுனன்.

4. இவன் தீயினின்றும் தப்பியபோது இவனது கால்கள் கரிந்து போயின. இதனுல் இவன் '**கரிகாலன்**' என அழைக்கப்பட்டான். இவன் புத்தி

கூர்மையும், உலகியல் அறிவும் நிரம்பியவன். இவன் இளமைப் பருவத்திலேயே அரசுரிமை அடைந்தான்.

5. ஒருநாள் கரிகாலன் தன் நியாயசபையில் வீற்றிருந்தான். அப்பொழுது இரு முதியவர்கள் தம்முள் பகைமை கொண்டு நியாயம் பெறவேண்டி மன்னனிடம் வந்தனர். வந்தவர்கள் மன்னன் இளைஞனாக இருந்ததைக் கண்டு, இவ்விளைஞன் எவ்வாறு நீதி வழங்குவான் என்று பேசிக்கொண்டனர்.



அதைக் கேட்ட வேந்தன் அவர்களை நோக்கி, "இங்கே அமருங்கள்; நீதிபதி சீக்கிரம் வந்து விடுவார்," என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றான். சிறிது நேரத்தில் மன்னன் ஒரு முதியவர் போல் வேடம் பூண்டு நீதி மன்றத்துக்கு வந்து சேர்ந்தான். அப்பொழுது வழக்காளிகள் தம் வழக்கைத் தெரிவித்துக் கொண்டனர். அவன் நன்கு விசாரணை செய்து தீர்ப்புக் கூறினான். அவர்கள் அவனுடைய தீர்ப்பு நீதியானதாய் இருக்கக் கண்டு மகிழ்ந்து சென்றனர்.

6. இவனது சபையில் கற்றோர் பலர் இருந்தனர். இவன் காலத்தில் பல சமயங்களும் சிறந்து விளங்கின. இவன் குடிகளின் குறிப்பறிந்து நல்லாட்சி செய்தான். காவிரி நதிக்கு அணைகட்டி, ஆங்காங்குப் பல கால்வாய்களை அமைத்து நீர்ப்பாய்ச்சிக் கமத்தொழிலை விருத்தி செய்தான். இவ்வாறு வளம்

பெருக்கி நலம் செய்ததால் குடிகள் யாவரும் இவனைக் "**கரிகால் வளவன்**" என்றும், "**கரிகாற் பெரு வளத்தான்**" என்றும் போற்றினர்.

7. கரிகாலன் பல போர்களில் வெற்றி பெற்றுப் புகழ் ஈட்டி உள்ளான். சேர மன்னரையும், பாண்டிய மன்னரையும் வென்று தமிழ்நாடு முழுவதையும் ஆட்சி செய்தான். ஆரியரை வென்று அவர்களிடம் இருந்து திறை கொண்டான். தன் வெற்றியின் அடையாளமாகப் புலிக்கொடியை இமயமலையிற் பொறித்தான். சோழவேந்தருள் சிறந்த இம்மன்னனை ஒரு புலவர் புகழ்ந்து பாடியுள்ளார். அவருக்கு அரசன் பதினாறு இலட்சம் பொன் பரிசளித்தான்.

| | | | |
|---|---|---|---|
| மூவேந்தர் | அரசுரிமை | முதியோர் | வழக்கு |
| அறநெறி | கரிந்து | வேடம் | விசாரணை |
| பேணி | உலகியல் | நீதிமன்றம் | குறிப்பறிதல் |
| குழப்பம் | வீற்றிருத்தல் | வழக்காளி | வளவன் |

## பயிற்சி

1. மூவேந்தர்கள் யாவர்?
2. கரிகாற் சோழன் என்னும் பெயர் வந்த காரணம் என்ன?
3. இவன் இழந்துபோன அரசுரிமையை எவ்வாறு பெற்றான்?
4. மன்னன் ஏன் முதியவர்போல வேடம் புனைந்தான்?
5. கரிகாற் சோழன் பெற்ற சிறப்புப் பெயர்கள் எவை?
6. இவன் பெற்ற வெற்றிகள் யாவை?

**பேச்சு :**

**பின்வரும் வாக்கியங்களிலுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. செந்தமிழ் நாட்டைச் சேரர் —— பாண்டியர் என்னும் —— அரசாண்டனர்.
2. தீயினின்றும் —— இவனது —— கரிந்து போயின.
3. குடிகள் யாவரும் இவனை —— என்றும் —— என்றும் போற்றினர்.
4. தன் வெற்றியின் —— புலிக்கொடியை —— பொறித்தான்.

**எழுத்து :**

கரிகாற் சோழனின் அரசாட்சியைப்பற்றி அறிந்தவற்றை எழுதுக.

# 19. நெசவுத் தொழில்

பூமியில் வந்த மனித உயிருக்கு
இன்றியமையா விரண்டு காரியம் ;
உண்டி ஒன்றே ; உடை மற்றொன்றே.
ஏரின் உழுதல் உண்டி யுதவும்.
நூலின் நெசவு சீலை யுதவும்.
உடையை யுதவும் நெசவுத் தொழிலோ
மானங் காக்கும் ; வளங்க ளாக்கும் ;
பொன்னைக் கொடுக்கும் ; புகழை யெடுக்கும்.
சோம்பைப் போக்கும் ; தொழிலை யாக்கும்.
தெள்ளிய நீதி வள்ளுவன் தானும்
ஏந்தும் புகழ்ச்சிக் காந்தி யடிகளும்
தேர்ந்து கொண்டதும் நெசவுத் தொழிலே.
நீதி யான நெசவுத் தொழிலை
நீங்கள் விடுத்த நேரம் தொடங்கி
வறுமை வந்தது ; பெருமை போனது ;
பாவை எடுங்கள் ; தறியை நடுங்கள் ;
காலை மாலை நூலை நூலுங்கள்.
ஆடை நெய்யுங்கள் பீடை போய்விடும்.
இழந்த நன்மைகள் பெற்று,
வளம்பெற வாழலாம் வாய்மையீங் கிதுவே !

—நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர்.



## 20. வாழைப்பழத் தோல்

1. கண்டி நகரத்தில் கண்ணன் என்னும் ஒரு சிறுவன் இருந்தான். அவன் தாய் ஒரு நாள் படக் காட்சிக்கு அவனை அழைத்துச் சென்றாள். அவர்கள் படக்காட்சி தொடங்குவதற்குச் சிறிது நேரம் முன்பதாகப் படமாளிகைக்குச் சென்றுவிட்டனர். அப்பொழுது பிரவேச அனுமதிச் சீட்டுக் கொடுக்கப்படும் அறை திறக்கப்படவில்லை. ஆதலால், தாயாரும் மைந்தனும் அருகில் நின்ற ஒரு மர நிழலில் நின்றனர்.

2. அவர்களின் அருகில் ஒரு பழக்காரி பழம் விற்றுக் கொண்டிருந்தாள். தட்டில் இருந்த வாழைப் பழம் கண்ணனுடைய கவனத்தைக் கவர்ந்தது. அவன் பழம் வாங்கித் தரும்படி தன் அன்னையாரைக் கேட்டான். அவ்வம்மையார் அவனுக்கு இரண்டு பழங்கள் வாங்கி அளித்தார். கண்ணன் களிப்புடன் அவற்றை உரித்தான். தோலைத் தான் நின்று

கொண்டிருந்த இடத்திலேயே எறிந்துவிட்டுப் பழங் களைத் தின்றான்.

3. சிறிது நேரம் கழித்துப் பிரவேச அனுமதிச் சீட்டுக் கொடுக்க ஆரம்பித்தார்கள். கண்ணனின் தாயார் அதனை வாங்குவதற்கு விரைந்து சென் றார். வழியில் கண்ணன் வீசி எறிந்த வாழைப் பழத் தோலின்மீது ஒரு காலை வைத்துவிட்டார். அதனால் அவர் சறுக்கிக் கீழே விழுந்தார்.

4. தலையில் பலமான காயம்பட்டதால், விழுந் தவர் எழுந்திருக்கவில்லை. கண்ணன் ஓவென்று கதறி அழுதான். மக்கள் கூடிவிட்டார்கள். அவர்கள் ஒரு வண்டியில் அந்த அம்மையாரை ஏற்றி வைத்திய சாலைக்குக் கொண்டு போனார்கள்.

5. அங்கிருந்த வைத்தியர் காயத்தைப் பரி சோதித்தார். காயம் அபாயகரமானதாய் இருந்தது. அதனால் அவர், காயம்பட்டவர் வைத்தியசாலையி லேயே சில நாட்கள் இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டார். கண்ணன் தாயாரை அங்குவிட்டுத் தான்மட்டும் அழுதுகொண்டு வீடுபோய்ச் சேர்ந் தான்.

6. வீட்டில் இருந்தவர்கள் நடந்தவற்றை அறிந்து வைத்தியசாலைக்குப் போனார்கள். கண்ணன் மட்டும் வீட்டில் அழுதுகொண்டே இருந்தான். தான் கவனமின்றி வீதியில் எறிந்த வாழைப்பழத் தோலால் ஏற்பட்ட விபத்தைப்பற்றி நினைக்க நினைக்க அவ னுக்கு வருத்தம் அதிகரித்தது. தன் அன்னையாருக்கு ஏற்பட்ட ஆபத்தால் அவர் ஒரு வேளை இறந்து போவாரோ என்று எண்ணியபோது, அவன் உள்ளம் பதறியது.

7. நல்ல காலமாக கண்ணனுடைய தாயார்

சில நாட்களில் குணமடைந்து வீடுவந்து சேர்ந்தார். அன்றுதான் கண்ணன் சந்தோஷமடைந்தான். அன்று முதல் கண்ணன் வாழைப்பழம் தின்ருல், அத்தோலேக் குப்பைத் தொட்டியில் போட்டுவந்தான். அவன் வீதியில் செல்லும்பொழுதும் கீழே வாழைப் பழத்தோலேக் கண்டால், அதனே ஓரமாகத் தள்ளிவிட் டுப்போவது வழக்கம். கண்ணுடித் துண்டு, ஆணி, குண்டூசி, கூரிய கல் முதலிய பொருள்களேக் கண் டாலும் அவன் அவற்றையும் அப்புறப்படுத்தாமல் போவதில்லே.

8. இந்தப் பழக்கத்தை நாம் எல்லோரும் அனு சரிக்க வேண்டுவது அவசியம். வீதியில் நடக்கும் ஒவ்வொருவரும் இப்பழக்கத்தைக் கையாண்டால், அறியாமையாலும், அலட்சிய புத்தியாலும் ஏற்படும் அநேக ஆபத்துகள் நீங்கும்.

| | | |
|---|---|---|
| படக்காட்சி | அன்னேயார் | ஒருவேளே |
| படமாளிகை | களிப்பு | குணமடைந்து |
| அனுமதிச்சீட்டு | உரித்தான் | அறியாமை |
| மைந்தன் | சறுக்கி | அலட்சியம் |
| பழக்காரி | காயம் | அப்புறம் |
| கவனம் | விபத்து | நல்லகாலம் |
| கவர்ந்தது | அதிகரித்தது | கூரியகல் |

### பயிற்சி

**விளக்கம் :**

1. கண்ணன் தன் தாயாருடன் எங்கே போனுன்?
2. கண்ணனேக் கவர்ந்தது யாது?
3. கண்ணன் வாழைப்பழத் தோலே யாது செய்தான்?
4. கண்ணனின் தாயாருக்கு ஏற்பட்ட விபத்து யாது?
5. கண்ணன் வீட்டில் ஏன் அழுது கொண்டிருந்தான்?

6. வாழைப்பழத் தோலை இப்பொழுது யாது செய்கிருன்?

7. நீர் பழங்களைச் சாப்பிட்டால், அவற்றின் தோலை யாது செய்வீர்?

பேச்சு :

**கீழே உள்ள ஒவ்வொரு வாக்கியத்தையும் தனித்தனியே இரண்டு வாக்கியங்களாகப் பிரித்தெழுதுக :**

1. தாயாரும் மைந்தனும் படமாளிகையின் அருகில் இருந்த மரநிழலில் நின்றனர்.

2. கண்ணன் பழத்தை உரித்துத் தோலை அருகில் எறிந்துவிட்டுப் பழத்தைச் சாப்பிட்டான்.

3. தலையில் பலமான காயம் பட்டதால், விழுந்தவர் எழுந்திருக்கவில்லை.

**பின்வரும் சொற்களின் பொருள் விளங்க வாக்கியங்கள் அமைக்க :**

| | | |
|---|---|---|
| 1. படக்காட்சி | 4. வைத்தியசாலை | 7. துக்கம் |
| 2. மரநிழல் | 5. விபத்து | 8. பழக்கம் |
| 3. காயம் | 6. ஆபத்து | 9. அறியாமை |

எழுத்து :

கண்ணனின் தாயாருக்கு ஏற்பட்ட விபத்தை விளக்கி எழுதுக.



## 21. சாரணர் இயக்கம்

1. பிறருக்கு உதவி செய்தல், எல்லா உயிர்களிடத்திலும் அன்பாயிருத்தல், பெரியோருக்குக் கீழ்ப்படிதல் முதலிய நற்குணங்களைப் பிள்ளைகள் இளமை முதற்கொண்டே பழகிக்கொள்ளல்வேண்டும். நல்வாழ்க்கைக்கு அவசியமான பழக்க வழக்கங்களைப் பழகிக் கொள்வதற்கு உதவியாகப் பல இயக்கங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் சாரணர் இயக்கமே மிகச் சிறந்தது.

2. சேர் ரெபேட் பேடன் பவுல் என்னும் ஆங்கிலேயரால் ஆபிரிக்காவில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் இன்று உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் சிறந்து விளங்குகின்றது. சாரணர் படையில் உள்ள ஒவ்வொருவரும் எந்த நேரமும் பிறருக்கு

உதவி செய்ய ஆயத்தமாக இருத்தல் வேண்டும். ''உதவி செய்ய ஆயத்தமாயிரு,'' என்பதே அவர் களின் கொள்கையும், மந்திரமுமாகும்.

3. சாரணர்கள் எப்பொழுதும் உண்மை பேசு பவர்களாயும், கீழ்ப்படிவுள்ளவர்களாயும், எல்லா உயிர்களிடத்தும் அன்பும், இரக்கமும் உடையவர் களாயும் இருத்தல் வேண்டும். அவர்களிடையே சாதி சமய வேறுபாடு இருத்தல் கூடாது. பொறுமை யும், சிக்கனமான வாழ்க்கையும் உடையவர்களாக வாழவேண்டும். அவர்கள், ''தன் கையே தனக்குத் துணை,'' என்பதை உணர்ந்து அதன்படி நடத்தல் வேண்டும்.



4. சாரணர் மூன்று அணிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். முதலாவது அணியில் ஆறு வயது முதல் பதினொரு வயது வரையில் உள்ளவர்களும், இரண்டாவது அணியில் பதினொரு வயதுக்குமேல் பதினெட்டு வயது வரை உள்ளவர்களும், மூன்றாவது அணியில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களும் இருப்பார்கள்.

5. சாரணர் பிறருக்கு வணக்கம் செய்யும் பொழுது, தங்கள் இடது கையின் பெருவிரலையும், சிறுவிரலையும் மடக்கிக் கொண்டு ஏனைய மூன்று விரல் களாலும் வணக்கம் செய்வார்கள். ஒரு சாரணன் இன்னொரு சாரணனைச் சந்திக்கும்பொழுது இடக்கை யால் கை குலுக்கி மரியாதை செலுத்துவான்.

6. ஒருவர் தான் சாரணராகச் சேர்ந்துகொள்ள

விரும்பினால் அவர், "நான் கடவுளுக்கும், எனது தாய்நாட்டிற்கும் என்னால் இயன்ற கடமையைச் செய் வேன். எப்பொழுதும் பிறருக்கு உதவி செய்யத் தயா ராய் இருப்பேன். சாரணர் இயக்கத்திற்குரிய சட்டங் களுக்கு அடங்கி நடப்பேன்," என்னும் மூன்று உறுதிமொழிகளையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

7. இவ்வுறுதி மொழிகளை எப்பொழுதும் ஞாபகப்படுத்தும் அறிகுறியாகவே சாரணர்கள் தமது வணக்கத்தை மூன்று விரல்களாலும் செலுத்துவர். இவ்வியக்கம் சிறுவர்களைச் சமூகத்தொண்டில் ஈடு படுத்தி நல்ல பிரசைகள் ஆக்குகிறது.

8. திருவிழா, பொருட்காட்சி முதலியன நடை பெறும் இடங்களிலும், மக்கள் பெருந்திரளாகக் கூடும் பிற இடங்களிலும் சாரணர் சேவை செய்கின்றனர். இவர்கள் மக்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படும்பொழுது பிரதிபலன் கருதாது உதவி செய்கின்றனர். ஆபத் துக் காலத்தில் உதவி அளிக்கும் இவர்கள் பிரதம சிகிச்சை அளித்தல், நீந்துதல் முதலியவற்றில் தேர்ச்சி உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

9. இப்படியான உதவிகளைப் பிறருக்குச் செய் வதையே கடமையாகக் கொண்ட சாரணர் தேகா ரோக்கியமும், பலமும் உடையவர்களாய் இருத்தல் மிக அவசியம். இலங்கையிலுள்ள கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் சாரணர் இயக்கம் அதிகமாகப் பரவி வருகின்றது. ஒவ்வொரு மாணவனும் சாரண னாகப் பயிற்சி பெற்று நல்லொழுக்கம் உடையவனாக விளங்கவேண்டும். அப்பொழுதுதான் நம் நாட்டுச் சிறுவர்கள் தேசப்பணிக்கு உகந்த தியாகிகள் ஆவார்கள். இதனால் நமது நாடும் சிறந்து விளங்கும்.

| | | | |
|---|---|---|---|
| கீழ்ப்படிவு | அணிகள் | செலுத்துவர் | பெருந்திரள் |
| நல்வாழ்க்கை | வணக்கம் | சமூகத்தொண்டு | பிரதம சிகிச்சை |
| பழக்க வழக்கம் | கைகுலுக்கி | ஈடுபடுத்தி | பொருட்காட்சி |
| இயக்கம் | தாய்நாடு | பிரசைகள் | தேசாரோக்கியம் |
| சிக்கனம் | உறுதிமொழி | மந்திரம் | தேசப்பணி |
| ஆயத்தம் | ஞாபகம் | பிரதிபலன் | தியாகிகள் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. பிள்ளைகளிடம் காணப்படவேண்டிய நற்குணங்கள் எவை ?
2. சாரணர் இயக்கம் எதற்குத் துணை புரிகின்றது ?
3. சாரணர் இயக்கம் எங்கே யாரால் ஆரம்பிக்கப்பட்டது?
4. சாரணர்களின் மந்திரம் யாது ?
5. சாரணர்களிடத்தில் காணப்படவேண்டிய சிறந்த குணங்கள் எவை ?
6. சாரணர்கள் கடைப்பிடிக்க வேண்டிய உறுதிமொழி கள் எவை ?
7. சாரணர்கள் வணக்கம் செலுத்தும் முறையினுல் எவை ஞாபகப் படுத்தப்படுகின்றன ?
8. சாரணர்களுக்குத் 'தேகாரோக்கியம் மிக அவசியம்.' ஏன் ?

**பேச்சு :**

**பொருத்தமான சொற்களை வைத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. நற்குணங்களைப் பிள்ளைகள் —— பழகிக் கொள்ள——
2. உதவி செய்ய —— என்பதே சாரணங்களின் ——
3. அவர்களிடையே —— சமய —— இருத்தல் தகாது.
4. சாரணர் —— உரிய —— அடங்கி நடப்பேன்.

**பின் வரும் சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் கூறுக :**

1. அன்பு 3. உண்மை 5. ஆரோக்கியம் 7. இரக்கம்
2. இளமை 4. பொறுமை 6. சிறுவர் 8. இடது

**பின் வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைக்க :**

1. அரும் பெரும் 3. பழக்கவழக்கம் 5. தேசப்பணி
2. பெருந்திரள் 4. சமூகத் தொண்டு 6. தியாகம்

**எழுத்து :**

1. சாரணரின் உறுதிமொழிகளை எழுதுக.
2. சாரணர்களிடம் இருக்கவேண்டிய குணங்களை எழுதுக.



# 22. சில சந்தேகங்கள்

(சம்பாஷணை)

**மகள் :** அப்பா! எனக்குச் சில சந்தேகங்கள் இருக்கின்றன. அவற்றைத் தங்களிடம் கேட்டுத் தீர்த்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**தந்தை :** மகளே! நன்ருகக் கேள். சந்தோஷமாகச் சொல்லுகிறேன்.

**மகள் :** அப்பா! நீங்கள் எப்பொழுதும் தண்ணீர் குடிப்பதற்கு முன், பாத்திரத்திலிருந்து சிறிது தண்ணீரைக் கீழே ஊற்றுகிறீர்கள். ஏன் அவ்வாறு செய்கிறீர்கள் ?

**தந்தை :** பாத்திரத்திலுள்ள தண்ணீரில் ஈ எறும்பு முதலிய பிராணிகளும், தூசு, கிருமி, முதலியவைகளும் இருக்குமானல் அவை நீரின் மேலே மிதக்கும். நாம் தண்ணீரைக் கீழே ஊற்றும்பொழுது அப்பொருள்கள் நீருடன் கீழே

விழுந்துவிடும். அதற்காகவே நீரைக் குடிக்கு முன் சிறிது வெளியே ஊற்றுகிறேன்.

**மகள் :** அப்பா! தெரிந்துகொண்டேன். ஆனால், நீங்கள் பாத்திரத்திலுள்ள தண்ணீரை முற்றிலும் குடியாமல் சிறிது தண்ணீரைப் பாத்திரத்திலே விட்டுவிடுவதைப் பார்க்கிறேன். ஏன் அப்படிச் செய்கிறீர்கள்.

**தந்தை :** மகளே! தண்ணீரிலுள்ள அசுத்தப் பொருள்கள் எப்பொழுதும் பாத்திரத்தினடிப் பாகத்தில் தங்கி இருக்கும். நாம் பாத்திரத்திலுள்ள நீர் முழுவதையும் குடித்தால், அப் பாத்திரத்தின் அடிப்பாகத்தில் இருக்கும் அழுக்குப் பொருள்கள் நம் வயிற்றினுள்ளே செல்லும். அவ்வாறு செல்வதைத் தடுப்பதற்காகவே தண்ணீரை முற்றிலும் குடியாமல் சிறிது பாகத்தைப் பாத்திரத்தில் விடுகிறேன்.

**மகள் :** "தூணைச் சுற்றாதே, துரும்பைக் கிள்ளாதே" என்று அம்மா அடிக்கடி எச்சரிக்கிறாரே. அதற்குக் காரணம் என்ன ?

**தந்தை :** ஆம். தூணைச் சுற்றுவதனால் மயக்கம் உண்டாகும். மயக்கம் உண்டாவதனால் கீழே விழுந்து காயமடைய நேரிடும். துரும்பைக் கிள்ளும்பொழுது சில சமயங்களில் அது நகத்தின் கீழுள்ள தசையில் தைத்துவிடும். அதனால் வலி உண்டாகும். இவற்றை நினைத்தே அம்மா எச்சரிக்கை செய்கிறார்.

**மகள் :** அப்பா! பாட்டி அடிக்கடி "தரையை அடிக்காதே; வெறுந்தரையில் படுக்காதே," என்று சொல்வார். அது எதற்காக?

**தந்தை :** மகளே! தக்க காரணம் இல்லாமல் பாட்டி

அவ்வாறு சொல்லமாட்டார். தரையை அடிப் பதனுல், அதிலுள்ள சீவ பிராணிகள் இறக்க நேரிடும். வெறுந்தரையிற் படுப்பதனுல் எறும்பு முதலிய சிறு பிராணிகள் நம் காது, மூக்கு முதலிய உறுப்புகளுள் புகுந்துவிடும். அதனுல் நாம் துன்பம் அடைய நேரிடும்.

**மகள் :** "நகத்தைப் பற்களாற் கடியாதே" என்று ஆசிரியர் வற்புறுத்துகிருரே. ஏன் அப்பா? அதனைத் திரும்பத் திரும்பக் கூறி வற்புறுத்து கிருர்.

**தந்தை :** நகத்தைக் கடிக்கும்பொழுது நகத்தினுள் இருக்கும் அழுக்குகள் கரைந்து வயிற்றினுள் செல்லும். அதனுல் பலவிதமான நோய்கள் உண்டாகும். சில சமயங்களில் கடிக்கப்படும் நகமே வயிற்றினுள் சென்று வருத்தத்தை வரு விக்கும். அதனுலேயே ஆசிரியர், "நகத்தைப் பற்களால் கடியாதே," என்று வற்புறுத்துகிருர்.

**மகள் :** அப்பா! மிகவும் சந்தோஷம். எனக்கிருந்த சந்தேகங்களில் சில இன்று தீர்ந்தன. இன்னும் சில சந்தேகங்கள் உள. அவற்றை இன்னெரு நாளையில் கேட்டுத் தெரிந்துகொள்வேன்.

**தந்தை :** ஆம். தெரியாதவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். அதுவே சிறந்த குணமாகும்.

| | | | |
|---|---|---|---|
| சந்தேகம் | அழுக்கு | படுக்காதே | மயக்கம் |
| பாத்திரம் | துரும்பு | சீவபிராணிகள் | காயம் |
| ஊற்றுதல் | கிள்ளல் | வற்புறுத்தல் | தீர்ந்தன |
| மிதக்கும் | எச்சரித்தல் | திரும்பத்திரும்ப | சிறந்த குணம் |
| முற்றிலும் | காயம் | பலவிதமான | அசுத்தம் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. தண்ணீரைக் குடிப்பதற்கு முன் ஏன் சிறிது நீரை வெளியே ஊற்றுகிறார்கள் ?

2. நீரைக் குடிப்பவர்கள் முழுவதையும் குடியாது சிறிது பாகத்தை ஏன் பாத்திரத்தில் விடுகிறார்கள் ?

3. துரும்பைக் கிள்ளுவதினால் ஏற்படக்கூடிய தீங்கு என்ன ?

4. ஏன் வெறுந்தரையிற் படுக்கக் கூடாது ?

5. நகத்தைப் பற்களாற் கடிப்பதனால் ஏற்படக்கூடிய தீங்கு என்ன ?

**பேச்சு :**

**பின்வரும் கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக :**

1. எனக்குச் சில —— இருக்கின்றன.
2. அழுக்குப் பொருள்கள் பாத்திரத்தின் —— தங்கி ——.
3. தூணைச் —— துரும்பைக் ——.
4. தரையை —— வெறுந்தரையில் ——.
5. நகத்தைக் —— அழுக்குகள் —— வயிற்றினுள் ——.

**பின்வரும் சொற்களின் பொருள் விளங்க வாக்கியங்கள் அமைக்க :**

| | | | |
|---|---|---|---|
| 1. சந்தேகம் | 3. அழுக்கு | 5. தசை | 7. பிராணிகள் |
| 2. மிதக்கும் | 4. துரும்பு | 6. வலி | 8. வருத்தம் |

**எழுத்து :**

நகத்தை ஏன் பற்களால் கடிக்கக்கூடாது என எழுதுக.

# 23. விதைகள் பரவும்வகை

1. மரம், செடி, கொடி, புல், பூண்டு ஆகிய வற்றிற்குத் 'தாவரம்' என்னும் பொதுவான பெயர் வழங்கப்படுகின்றது. தாவரங்களுள் பெரும்பாலா னவை விதைகளின் மூலமே விருத்தியாகின்றன. ஒரு செடியில் உற்பத்தியாகும் விதைகள் எல்லாம் அச்செடியின் கீழேயே விழுந்து முளைக்குமானல், அவை நெருக்கத்தால் விருத்தியாகமாட்டா. ஆகவே, தாவரங்கள் பெருக வழியில்லாமல் அழிந்துபோகும். அவ்வாறு அழிந்து போகாமல் விதைகள் எங்கும் பரவி முளைத்து விருத்தியாகுமாறு கடவுள் அவற்றை அமைத்துள்ளார்.

2. சில செடிகளது விதைகளின் மேல் உரோமம் அல்லது இறகு போன்ற மெல்லிய பொருள் காணப் படும். எருக்கு, நாணல் ஆகியவற்றின் விதைகள் இவ்வாறு அமைந்துள்ளன. இவ்வகையான விதை கள் காற்றினல் தூரத்திற்குக் கொண்டு செல்லப் படுகின்றன.

3. சீவராசிகளின் மூலமாகவும் விதைகள் பரவு கின்றன. மனிதர் பலவகையான பழங்களைத் தின்று அவற்றின் கொட்டைகளை ஆங்காங்கு எறிவதுண்டு. சில தாவரங்களின் விதைகளில் மெல்லிய கொழுக்கி போன்ற உறுப்புகள் இருக்கும். அவைகளின் ஓர மாகச் செல்லும் மனிதரின் உடுப்புகளிலும், மிருகங் களின் மீதும் அவை ஒட்டிக்கொள்ளும். பின்னர் அவை மனிதர் எடுத்தெறிவதாலும் விலங்குகள் உராய்வதாலும், கீழே விழும். பழங்களைத் தின்னும் பறவைகள் அவற்றை வெகுதூரம் கொண்டு சென்று

தின்றபின் கொட்டைகளைக் கீழே போடுவதனாலும் அவைகள் பரவுகின்றன.

4. மழை நீரும் நதிகளும் விதைகள் பரவ உதவி புரிகின்றன. ஆற்றின் ஓரத்திலுள்ள தேங் காய் போன்ற மிதக்கும் தன்மையுள்ள காய்கள் ஆற்றில் விழுமானால், அவை நீரால் வெகுதூரம் கொண்டு போகப்படும். இவ்வாறே மழை நீர் ஓடும் போதும், தரையின்மீது கிடக்கும் விதைகள் ஓரிடத்தி லிருந்து வேறிடத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

5. வெடித்துப் பரவும் விதைகளும் சில உண்டு. காசித்தும்பை, ஆமணக்கு முதலியவற்றின் காய் கள் வெடித்தால், அவற்றின் உள்ளே இருக்கும் விதைகள் சிறிது தூரத்திற் சென்று விழுவதை நாம் அறிவோம். அசையாப் பொருளாய் உள்ள தாவரங் கள் வெவ்வேறிடங்களிற் சென்று பரவுவதற்கு இறை வனால் ஏற்படுத்தப்பட்டுள்ள சாதனங்களே இவைகள்.

| | | | |
|---|---|---|---|
| தாவரம் | சீவராசிகள் | அசையாப்பொருள் | எருக்கு |
| பெரும்பாலான | உராய்தல் | இறைவன் | நாணல் |
| முளைத்தல் | உறுப்புகள் | சாதனங்கள் | காசித்தும்பை |
| நெருக்கம் | வெடித்தல் | கொழுக்கி | ஆமணக்கு |
| விருத்தி | விலங்குகள் | பரவுதல் | உடுப்புகள் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. தாவரம் என்பது என்ன ?
2. தாவரங்கள் எப்படி விருத்தி அடைகின்றன ?
3. விதைகள் எவ்வாறு பரவுகின்றன ?
4. சில விதைகளில் உரோமம் போன்ற தோல் இருப்பத னால் பயன் என்ன ?
5. தாவரங்களின் விதைகள் பரவி முளைப்பதனால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

**பேச்சு :**

**பின்வரும் சொற்களை முறைப்படி ஒழுங்குபடுத்தி வாக்கியங்கள் அமைக்க :**

1. விதைகளின் பரவுகின்றன மூலம் தாவரங்கள்
2. நான்கு விதைகள் பரவுகின்றன வகையாகப்
3. பரவுவதற்கு, இறைவனால் சாதனங்களே இவைகள் ஏற்படுத்திய தாவரங்கள்
4. பரவும் வெடித்துப் விதைகளும் உண்டு சில
5. உதவி பரவ புரிகின்றன மழை நீரும் விதைகள் நதிகளும்

**பின்வருவனவற்றைப் பன்மையிற் கூறுக :**

| | | | |
|---|---|---|---|
| 1. விதை | 3. விலங்கு | 5. உறுப்பு | 7. செடி |
| 2. சீவராசி | 4. காய் | 6. சாதனம் | 8. இறகு |

**எழுத்து :**

விதைகள் பரவும் முறைகளை விளக்கி எழுதுக :

# 24. கைத்தொழில்

1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருப்பது உனக்கே சரியாமோ ? (கை)


2. உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ ? (கை)

3. நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள் ?
குசவன் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடத்திட வேண்டுமென்றும். (கை)

4. கொல்லரும் தச்சரும் கூடாமல்
கூடமும் மாடமும் வீடாமோ ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
காரியம் பலவினுக் கச்சாணி. (கை)

5. வேந்தர்கள் வரிப்பணம் வாங்குவதும்
வீரர்கள் வெற்றிகள் தாங்குவதும்
மாந்தர்கள் செய்யும் எத்தொழிலும்
மண்ணிற் சிறப்பது கைத்தொழிலால். (கை)

—நாமக்கல், வெ. இராமலிங்கம் பிள்ளை.



# 25. கடல் கடந்த தமிழன்

1. உலகத்தில் பல அரிய கருமங்களை நிறைவேற்றித் தமக்கும், தாம் பிறந்த நாட்டிற்கும் புகழைத் தேடிக் கொடுத்த பெரியார்களுள் **நவரத்தின சாமியும்** ஒருவர். இவர் இவ்விருபதாம் நூற்றுண்டில் தமது நீச்சல் வல்லமையினுல் பெரும் கடலைக் கடந்து புகழீட்டினுர்.

2. இவர் யாழ்ப்பாணத்திலுள்ள **தொண்டைமானுறு** என்னும் ஊரில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஒன்பதாம் ஆண்டில் பிறந்தார். இவர் இளமைப் பருவத்திலேயே மிகவும் புத்திசாலியாகவும், மனத்தைரிய முடையவராகவும் விளங்கினுர். தமிழ், ஆங்கிலம் என்னும் இரு மொழிகளிலும் வல்லவராய் இருந்தார்.

3. இவர் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் பொழுது ஒருநாள் இவருடைய ஆசிரியர் இருபத்திரண்டு மைல்கள் நீளமுள்ள ஆங்கிலக் கால்வாயை

ஒரு வெள்ளைக்காரன் நீந்திக் கடந்த சம்பவத்தைக் கூறினர். இதனை மிகவும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்த நவரத்தினசாமி தாமும் அவனைப் போலவே தமக்குப் பக்கத்திலுள்ளதும் முப்பத் தொன்றரை மைல்கள் தூரமானதுமான பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து விடவேண்டும் என்று எண்ணினர். தமது எண்ணம் நிறைவேறுவதற்கு அநுகூலமாக இவர் தருணம் வாய்க்கும் பொழு தெல்லாம் நீந்திப்பழக ஆரம்பித்தார்.

4. அரசினர் கமத்தொழிற் பகுதியில் போதகா சிரியராகக் கடமையாற்றும் இவர் இளமையில் தாம்



எண்ணிய கருமத்தை நிறைவேற்ற மறந்தாரல்லர். பாக்கு நீரிணையை நீந்திக் கடந்துவிட உறுதி கொண் டார். அவ்வாறே ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து நாலாம் ஆண்டு பங்குனி மாதம் பதினும் திகதி வல்லு வெட்டித் துறைமுகக் கடலுள் குதித் தார். ஆயிரக் கணக்கான மக்கள் ஆசி கூறி வழி

யனுப்பினர். அலேயெறியும் கடலில் இருபத்து மூன்றரை மணித்தியாலங்களாக ஒய்வின்றி நீந்தினுர். புயற்காற்றும், பெருமழையும் அவரின் முயற்சிக்கு இடையூருய் இருந்தன. அவரால் இயற்கையோடு எதிரிட்டு அப்பால் நீந்த முடியவில்லே. நண்பர்களின் வேண்டுகோட்படி அவரின் முதல் முயற்சி கைவிடப் பட்டது. இதனுல் நவரத்தினசாமி மனமுடைந்தா ராயினும், தமது தைரியத்தை இழந்து விடவில்லே. எப்படியாவது பாக்கு நீரிணேயை நீந்திக் கடந்து விடுவதென்று தீர்மானித்தார்.

5. தமது எண்ணத்தை நிலேநிறுத்த விரும்பிய இவர் அதே மாதம் இருபத்தைந்தாம் திகதி மாலே



மீண்டும் நீந்தப் புறப்பட்டார். பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடி வாழ்த்துக் கூறி வழியனுப்பி வைத்தார்கள். இம்முறை இயற்கையின் பல தடைகளேயும் வென்று சிறிதும் இளேப்பாருது அலேகடலேத்

தாண்டி அடுத்தநாள் மாலை ஏழுமணிக்கு இந்தியாவி லுள்ள **கோடிக்கரையில்** காலூன்றினர்.

6. கோடிக்கரையில் தாய்நாட்டு மக்கள் பெரும் ஆரவாரத்துடன். கடல்கடந்த தமிழனை வரவேற் றூர்கள். உலகத்தில் ஒப்பற்ற சாதனையைப் புரிந்த இவ் வீரத்தமிழன் தன் பிறந்தகம் வந்ததும் மக்கள் ஆனந்தத்தால் ஆரவாரித்து வாழ்த்தினர். இலங்கை, இந்தியப் பிரதம மந்திரிகள் ஆசி கூறிப் பாராட்டுரை பகர்ந்தனர். ஊர்கள் தோறும் வீரன் நவரத்தின சாமிக்கு உற்சாகமான வரவேற்புகள் அளிக்கப் பட்டன. **எலிசபெத் மகாராணி** இலங்கைக்கு வந்த பொழுது இவ்வீரர் அவருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

7. மூன்று குமாரர்களுக்குத் தந்தையும், நாற் பத்துநாலு வயதுடையவருமான நவரத்தினசாமி நீச்சல் வீரர் மாத்திரமன்று; கணிதம், சங்கீதம், நடிப்பு, சித்திரம், காற்பந்தாட்டம் ஆகியவற்றிலும்; கமத்தொழிலில் நவீன முறைகளைக் கண்டறிதலிலும் விசேட திறமை உடையவர். இவர் வாழ்நாளில் பல அரிய கருமங்களைச் சாதித்து நாட்டுக்குப் புகழீட்டித் தர இறைவன் அருள்புரிய வேண்டும்.

| | | |
|---|---|---|
| இறைவன் | குதித்தார் | ஆரவாரம் |
| நிறைவேற்றி | போதகாசியர் | ஒப்பற்ற |
| புத்திசாலி | அலையெறியும் | சாதனை |
| மனத்தைரியம் | புயற்காற்று | நவீனமுறை |
| சம்பவம் | இடையூறு | ஆசிகூறல் |
| நீச்சல் | கைவிடல் | பகர்ந்தனர் |
| பாக்குநீரிணை | இயற்கை | பாராட்டுரை |
| கமத்தொழில் | தடைகள் | அறிமுகம் |
| வாழ்த்து | அலைகடல் | கருமம் |

## பயிற்சி

**விளக்கம் :**

1. பெரியார்கள் தம் நாட்டுக்கு யாது செய்கின்றனர் ?
2. நவரத்தினசாமி எதனுல் புகழடைந்தார் ?
3. நவரத்தினசாமியின் பிறந்த ஊர் எது ?
4. பாக்கு நீரிணையை நீந்திக் கடக்க எப்பொழுது புறப் பட்டார் ?
5. இவரின் முதல் முயற்சி ஏன் கைவிடப்பட்டது ?
6. இரண்டாம் முறையாக எப்பொழுது நீந்தப் புறப் பட்டார் ?
7. இரண்டாம் முறை இவர் எடுத்த முயற்சியின் பெறு பேறென்ன ?
8. இவ்வீரருக்கு அளிக்கப்பட்ட சிறப்புகள் யாவை ?
9. இவரிடமுள்ள விசேட திறமைகள் யாவை ?

**பேச்சு :**

**பின்வரும் வாக்கியங்களிலுள்ள கோடிட்ட இடங்களை அடைப்புக் குறிகளுக்குள் உள்ள சொற்களில் பொருத்த மானவற்றைக் கொண்டு நிரப்புக :**

1. நவரத்தினசாமி ஒரு —— நீச்சல் வீரர் (சுமாரான, சிறந்த, மந்தமான)
2. இவர் தொண்டைமாறு என்னும் —— பிறந்தார் (நகரில், தேசத்தில், ஊரில்)
3. புயற்காற்றும் பெருமழையும் அவரின் முயற்சிக்கு —— இருந்தன (ஆதரவாய், சாதகமாய், இடையூருய்)
4. தாய்நாட்டு மக்கள் பெரும் —— கடல் கடந்த தமிழனை வரவேற்ருர்கள் (ஆத்திரத்துடன், ஆரவாரத்துடன், ஆறு தலுடன்)

**பின்வரும் சொற்களுக்குரிய பொருள் தரும் பிற சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் கூறுக :**

| | | | |
|---|---|---|---|
| 1. புத்தி | 3. வாழ்த்து | 5. முயற்சி | 7. இளைப்பு |
| 2. தைரியம் | 4. ஒப்பற்ற | 6. இழந்து | 8. இறைவன் |

**எழுத்து :**

நவரத்தின சாமியின் வாழ்க்கைச் சரித்திரத்தைச் சுருக்கிக் கூறுக.

# செய்யுட் பகுதி

## 1. தோத்திரம்

உள்ளத்தில் உள்ள பரமா !—எனக்
குன்னருள் வெள்ளத்தை ஈவாய் ;
கள்ளமில் லாத மனத்தால்—உன்னைக்
காலையு மாலையு நினைப்பேன். (1)

கல்வி யறிவொளி ஈவாய் ;—செய்ய
கலையிற் புலமை யளிப்பாய் ;
நல்ல ஒழுக்கம் அருள்வாய் ;—தாய்
நாட்டின் மணிப்பிள்ளை யாவேன். (2)

துச்ச நினைவை ஒழிப்பாய் ;—என்றும்
தூய நினைப்பை வளர்ப்பாய் ;
அச்சப் பிசாசைத் துரத்தி—வீரர்
ஆண்மையும் ஆற்றலும் தாராய். (3)

தாயும் தகப்பனும் நீயே ;—கல்வி
தந்துத வுங்குரு நீயே ;
நோய்தவிர் வைத்தியன் நீயே ;—நான்
நூறுண்டு வாழச்செய் வாயே. (4)

—யோகி, ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார்

1. (பதவுரை) உள்ளத்தில் உள்ள - (என்னுடைய) மனத்தில் நிலைபெற்றிருக்கின்ற, பரமா - இறைவனே, உன் அருள் வெள்ளத்தை - உனது கிருபையின் மிகுதியை, ஈவாய் - (எனக்குக்) கொடுப்பாயாக ; கள்ளமில்லாத - வஞ்சனையில்லாத, மனத்தால் - மனத்தினால், உன்னை - (கடவுளாகிய) உன்னை, காலையும் மாலையும் - காலையிலும் பொழுது சாயுங்காலத்திலும், நினைப்பேன் - துதித்துக்கொண்டே இருப்பேன்.

(கருத்துரை) இறைவனே, எந்நேரத்திலும் உன்னை நினைத்தவண்ணம் இருக்கும் எனக்கு நீ திருவருள் செய்ய வேண்டும்.

**2.** (ப - ரை) கல்வியறிவொளி - கல்வியினலுண்டாகும் அறிவாகிய பிரகாசத்தை, ஈவாய் - தருவாயாக; செய்ய கலையில் - செம்மையான சிறந்த நீதி சாஸ்திரங்களில், புலமை அளிப்பாய் - நல்ல அறிவை (எனக்குக்) கொடுப்பாயாக; நல்ல ஒழுக்கம் - நல்ல நடத்தைகளை, அருள்வாய் - கொடுத்தருள்வாயாக; தாய் நாட்டின் - தாய் நாட்டினது, மணிப்பிள்ளையாவேன் - இரத்தினத்தைப் போன்ற (சிறந்த புத்தியுள்ள) பிள்ளையாய் நான் விளங்குவேன்.

(க - ரை) தாய் நாட்டினது சிறந்த புதல்வனுக நான் விளங்குமாறு திருவருள் செய்ய வேண்டும்.

**3.** (ப - ரை) துச்ச நினைவை - கீழ்த்தரமான (கெட்ட) எண்ணங்களை, ஒழிப்பாய் - (மனத்திலிருந்து) நீக்கிவிடுவாயாக; என்றும் - எப்பொழுதும், தூய நினைப்பை - பரிசுத்தமான நல்ல எண்ணங்களையே, வளர்ப்பாய் - அதிகரிக்கச் செய்வாயாக; அச்சப் பிசாசை - பயமாகிய பிசாசை, துரத்தி - (என் மனத்தினின்று) நீக்கி, வீரர் - வீரர்களுக்குரிய ஆண்மையும் ஆற்றலும் - வீரத் தன்மையையும் பெருஞ்சக்தியையும், தாராய் - (எனக்குக்) கொடுத்தருள்வாயாக.

(க - ரை) பரிசுத்தமான மனமுடைய சுத்த வீரனுய் விளங்கும்படி எனக்கு அருள் புரிய வேண்டும்.

**4.** (ப - ரை) தாயும் தகப்பனும் நீயே - (என்) பெற்ருேராய் விளங்குபவன் நீயே; கல்வி - (சகல) கற்பனையும், தந்து உதவும் - கொடுத்து உதவுகின்ற, குரு நீயே - உபாத்தியாயனும் நீயே; நோய் தவிர் - வியாதிகளை நீக்கத் தகுந்த, வைத்தியன் நீயே - மருத்துவனும் நீயே; நான் நூருண்டு வாழச் செய்வாய் - நான் நூறு வருடங்கள் வாழும்படி அருள் செய்வாயாக.

(க - ரை) கடவுளே, எல்லாம் நீயாகவே இருக்கிருய். ஆதலின், பல ஆண்டுகள் யான் பயன்பட வாழுமாறு நீ அருள் செய்ய வேண்டும்.

## 2. நீதி வெண்பா

தாமரைபொன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வாது—ஆமழ்ன்மற்(று)
எங்கே பிறந்தாலும் எள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என்? (1)

மென்மதுர வாக்கால் விரும்பும் சகம்; கடின
வன்மொழியி னலிகழு மண்ணுலகம்;–நன்மொழியை
ஓதுகுயில் ஏதங் குதவியது? கத்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று? (2)

கொம்புளதற் கைந்து; குதிரைக்குப் பத்துமுழம்;
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே;—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. (3)

ஈக்கு விடந்தலையில் எய்தும்; இருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே;—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே; துர்ச்சனருக்கு
அங்கமுழு தும்விடமே யாம். (4)

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலங்கிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ? விளம்பு. (5)

**1.** (ப - ரை) தாமரை - தாமரைப் பூவும், பொன் - தங்கமும், முத்து - நல்ல முத்தும், சவரம் - கவரிமான் மயிரும், கோரோசனை - (பசுவின் வயிற்றிலிருந்து கொள்ளும்) கோரோசனையாகிய வாசனைப் பொருளும், பால் - (பசுவின்) பாலும், பூ - மலரும், மரு - மருக்கொழுந்தும், தேன் - தேனும், பட்டு - பட்டும், புனுகு - புனுகும், சவ்வாது - சவ்வாதும், ஆம் அழல் - பயன்

படுகின்ற நெருப்பும், எங்கே பிறந்தாலும் - எங்கே தோன்றினு லும், எள்ளார் - (அவைகளை மனிதர்) இகழமாட்டார். (அது போல) நல்லோர்கள் - நல்ல குணமுடையவர்கள், எங்கே பிறந் தாலும் - எக்குடியில் பிறந்தாலும், என் - (அதனுல் உண்டாகும் இழிவு) என்ன ?

மற்று, ஏ - அசைச் சொற்கள்.

தாமரை சேற்றில் முளைப்பது ; பொன் மண்ணில் அகப்படு வது ; முத்து சிப்பியிலிருந்து எடுக்கப்படுவது ; வெண்சாமரை கவரிமான் மயிராலானது ; தேன் - தேனீக்களினுல் சேர்க்கப்படு வது ; பட்டு - பட்டுப் பூச்சியின் உடலிலிருந்து வருவது ; புனு கும், சவ்வாதும் மிருகங்களிடமிருந்து கிடைப்பவை.

(க - ரை) பெரியோர்கள் எங்கே பிறந்தாலும்; பெருமை அடைவார்கள்.

**2.** (ப - ரை) சகம் - உலகம், மென் மதுர வாக்கு - மென்மை யான, இனிய வார்த்தைகளை, விரும்பும் - (கேட்பதற்கு) ஆசைப் படும் ; மண்ணுலகம் - பூமி, கடின வன்மொழி - மிகக் கொடிய சொற்களை, இகழும் - (கேட்டு) நிந்திக்கும் ; நன்மொழி - இனிய சொற்களை, ஓது குயில் - பாடுகின்ற குயிலானது, அங்கு ஏது உதவியது ? - அவ்வுலகத்தில் என்ன உதவி செய்தது ? கத்தபந் தான் - கழுதை, இன்று - இன்று வரையில், ஏது அபராதம் செய்தது - என்ன குற்றம் செய்துவிட்டது ?

ஆல் - அசை.

(க - ரை) ஒவ்வொருவரும் இனிய சாந்தமான வார்த்தை களையே பேசவேண்டும். அப்பொழுதுதான் உலகத்தார் போற்றுவர்.

**3.** (ப - ரை) கொம்புளதற்கு - கொம்புள்ள மாட்டுக்கு, ஐந்து - ஐந்து முழம் (தூரத்தில் நாம் இருக்க) வேண்டும் ; குதிரைக்கு - குதிரையிருக்கும் இடத்திற்கு, பத்து முழம் - பத்து முழம் (தூரத்தில் இருக்க) வேண்டும் ; வெம்புகரிக்கு - மிக்க கோபமுடைய யானைக்கு, ஆயிரம் வேண்டும் - ஆயிரமுழம் (தூரத்தில் இருக்க) வேண்டும் ; (நெடுந் தூரத்தில் இருக்க வேண்டும் என்பது கருத்து). வம்பு செறி - வஞ்சனைகள் நிறைந்த, தீங்கினர்தம் கண்ணில் - தீயவர் கண்களில், தெரியாத தூரத்து - புலப்படாத தூரத்தில், நீங்குவதே - (அவர்களை விட்டுப்) போவதே, நல்ல நெறி - நல்ல முறையாகும்.

தான், ஏ - அசைச் சொற்கள்.

(க - ரை) தீயோர் உறவை அறவே நீக்கவேண்டும்.

4. (ப - ரை) ஈக்கு - ஈயினுக்கு, தலையில் - தலையிலே, விடம் - விஷம், எய்தும் - பொருந்தியிருக்கும்; இருந்தேளுக்கு - பெரியதேளுக்கு, வாய்த்த விடம் - பொருந்தியுள்ள விஷம், கொடுக்கில் வாழும் - (அதன்) கொடுக்கில் இருக்கும்; நோக்கரிய - பார்வைக்குப் பயங்கரமான, பைங்கண் - பளபளப்பான கண்களை யுடைய அரவுக்கு - பாம்பிற்கு, விடம் - விஷம், பல்லளவு - பற்களின் அளவிலேயே இருக்கும்; துர்ச்சனருக்கு தீயவர்களுக்கு, விடம் - விஷம், அங்க முழுதும் ஆம் - எல்லா அவயவங்களிலும் பரவியிருக்கும்.

ஏ - அசை.

(க - ரை) விஷ ஜந்துக்களைக் காட்டிலும் தீயோரே மிகவும் கொடியராவார்கள்.

5. (ப - ரை) அல் - இரவில், வானகத்து - வானிலே, ஆரும் - நிரம்பிய, எண்ணிலா - கணக்கற்ற, வான்மீன் - நட்சத்திரங்கள் இலகிடினும் - விளங்கினாலும், ஓர் - ஒப்பற்ற, வெண்ணிலா ஆமோ - வெண்மையுள்ள நிலவிற்குச் சாமானமாகுமோ? (ஆகா.) (அதுபோன்று) கல்லார் பலர் - (நூற்களைக்) கல்லாதவர் பலர், கூடி - ஒன்று சேர்ந்து, காதலித்து வாழினும் - (ஒருவரோடொருவர்) அன்பு கொண்டு வாழ்ந்திருந்தாலும், நூல் வல்லான் ஒருவனை - சகல சாஸ்திரங்களையும் கற்றுப் புலமை அடைந்த ஒருவனை, மானுவரோ - ஒத்திருப்பாரோ? விளம்பு - (நீ) சொல்.

ஏ - அசை.

(க - ரை) கல்வி கற்றவரே அனைவரினும் சிறந்தவர்.

## 3. வாக்குண்டாம்

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்;—கொண்டபே(ர்)
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல். (1)

மடல்பெரிது தாழை; மகிழ் இனிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா;—கடல்பெரிது;
மண்ணீரும் ஆகாது; அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். (2)

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் ;—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்ருன் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். (3)

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினுற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. (4)

மன்னனும் மாசறக் கற்ருேனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ருேன் சிறப்புடையன் ;—மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை ; கற்ருேற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு. (5)

—ஔவையார்

**1.** (ப - ரை) பண்டு - (உமி நீங்குதற்கு) முன்பாக, முளைப்பது - முளை விடுவது, அரிசியே ஆனுலும் - அரிசியே ஆயினும், உமி - உமியானது, விண்டு போனுல் - நீங்கிப் போனுல், முளையாதாம் - (அது) முளையாமற் போகும், (அதுபோல) கொண்ட - அடைந்த, பேர் ஆற்றல் - பெரிய வல்லமையை, உடையார்க்கும் - உடையவர்களுக்கும், ஏற்ற கருமம் - (தாங்கள்) மேற்கொண்ட காரியங்களை, அளவு இன்றி - அளவு இல்லாமல், செயல் - செய்து முடித்தல், ஆகாது - இயலாததாகும்.

(க - ரை) தம் ஆற்றலுக்கு மேற்பட்ட காரியத்தைச் செய்து முடித்தல் எவராலும் இயலாது.

**2.** (ப - ரை) தாழை - தாழையினது, மடல் - பூஇதழ், பெரிது- பெரியதாய் இருக்கிறது ; மகிழ் (ஆனுல், சிறிய இதழ்களைக் கொண்ட) மகிழம் பூ, கந்தம் - வாசனையினுல், இனிது - (தாழம் பூவைக்காட்டிலும்) இனிமையானது ; கடல் - சமுத்திரம், பெரிது - பெரியதாய் இருக்கிறது ; மண் நீரும் ஆகாது - (ஆனுல், அதிலுள்ள தண்ணீர் உடலிலுள்ள அசுத்தங்களைக்) கழுவுவதற் கேற்ற தண்ணீரும் ஆகாது ; அதன் அருகே - அக்கடலின் சமீபத்திலுள்ள, சிறு ஊறல் - சிறிய ஊற்று நீரானது, உண்

நீரும் - குடிப்பதற்குரிய தண்ணீராகவும், ஆகிவிடும் - பயன் படுவதாகும், (எனவே) உடல் - (அறிஞர்கள்) உருவத்தில், சிறியர் - சிறியவர்கள், என்று இருக்க வேண்டா - என்று கருதி (அவர்களை மதியாமல்) இருக்க வேண்டா.

(க - ரை) ஒருவருடைய பெருமையை அவரது கல்வியினு லன்றி, உருவத்தால் அறிய முடியாது.

3. (ப - ரை) கவை ஆகி - மரக் கப்புகளை உடையனவாகியும், கொம்பு ஆகி - கொம்புகளை உடையனவாகியும், காடு அகத்தே - காட்டினுள்ளே, நிற்கும் - நிலைபெற்றிருக்கும், அவை - அம் மரங்கள், நல்ல மரங்கள் - நல்ல மரங்கள், அல்ல - அல்லவாம்; சவை நடுவே - (பல அறிஞர்கள் கூடிய) சபையில், நீட்டு ஓலை - கொடுக்கப்பெற்ற சுவடியை, வாசியா நின்றான் - படிக்க முடி யாமல் (மௌனமாய்) நின்றவனும், குறிப்பு அறிய மாட்டா தவன் - கருத்தை அறிந்துகொள்ளத் திறமையில்லாதவனும், நல்மரம் - நல்ல மரங்கள்.

(க - ரை) கல்வியறிவு இல்லாதவர் மரத்திற்குச் சமான மாவர். எனவே, கல்வியை அனைவரும் கற்க வேண்டும்.

4. (ப - ரை) கல்லாதவன் - (கற்க வேண்டிய முறைப்படி நூல்களைக்) கல்லாதவன், கற்ற கவி, (பிறர் சொல்லக் கேட்டுக்) கற்றுச் சொல்லிய பாட்டானது, கானம் மயில் - காட்டிலுள்ள மயிலானது, ஆட - (தனது அழகிய தோகையை விரித்து) ஆடிக் கொண்டிருக்க, கண்டு இருந்த வான்கோழி - (அதைப்) பார்த்துக் கொண்டிருந்த வான்கோழியானது, தானும் அதுவாக - தானும் (அழகுள்ள) அந்த மயிலாகவே, பாவித்து - (தன்னைக்) கருதிக் கொண்டு, தானும் - தானும், தன் பொல்லாச் சிறகை - தன் னுடைய விகாரமான சிறகுகளை, விரித்து ஆடினால் போலும் - விரித்து ஆடுவதற்குச் சமமாகும்.

ஏ - அசை.

(க - ரை) கல்லாதவன், கவி பாடுவது கேலிக்கிடமாகும்.

5. (ப - ரை) மன்னனும் - அரசனும், மாசு அற - குற்றம் நீங்க, கற்றோனும் - (சகல சாஸ்திரங்களையும்) கற்றுத் தேர்ச்சி யுற்ற புலவனும், சீர் தூக்கின் - ஆராய்ந்து பார்த்தால், மன்னனில் - அரசனைவிட, கற்றோன் - (சகல சாஸ்திரங்களையும்) கற்றுத் தேர்ச்சியுற்ற புலவன், சிறப்பு உடையன் - பெருமை உடையவனாவான்; (ஏனெனில்) மன்னற்கு - அரசனுக்கு, தன் தேசம் அல்லால் - தன் நாட்டிலே யல்லாமல், சிறப்பு இல்லை - (பிற நாடுகளிலே) பெருமை இல்லை, கற்றோற்கு -

(சகல சாஸ்திரங்களையும்) கற்ற புலவனுக்கு, சென்ற இடம் எல்லாம் - (அவன்) போகும் நாடுகளில் எல்லாம், சிறப்பு - பெருமை உண்டாகும்.

(க - ரை) புலவரே எங்கும் சிறப்படைவர்.

## 4. தனிப்பாடல்கள்

### ஆரைக்கீரையின் சிறப்பு

பச்சடியும் தீண்டேன் பருப்பினிலும் கைவையேன் ;
கிச்சடியும் தீண்டேன் கிழங்கும்எடேன் ;—மெச்சுபுகழ்
ஆரைப் பதியில் அவித்துக் கடைந்துவைத்த
கீரைக் கறிகிடைக்கு மேல். (1)

—கவிமணி, தேசிகவிநாயகம் பிள்ளை

### சிரங்கு

செந்தில் குமரா ! திருமால் மருகா !என்
சிந்தை குடிகொண்ட தேசிகா !—நொந்தஇம்
மெய்யிற் சிரங்கை விடியுமட் டுஞ்சொறியக்
கையிரண்டு போதாது காண். (2)

—கவிமணி, தேசிகவிநாயகம் பிள்ளை

### வேலை

தோகைமேல் உலவும் கந்தன்
சுடர்க்கரத்(து) இருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
வணங்குவ(து) எமக்கு வேலை. (3)

—சைவ எல்லப்ப நாவலர்

### 1. ஆரைக்கீரையின் சிறப்பு

(ப - ரை) மெச்சு புகழ் - (அனைவராலும்) கொண்டாடப் படும் புகழையுடைய, ஆரைப் பதியில் - ' ஆரை ' என்னும் ஊரில், அவித்து - வேக வைத்து, கடைந்து வைத்த - (மத்தினால்) கடைந்து வைக்கப்பட்ட, கீரைக் கறி - கீரைக் கறியானது,

கிடைக்குமேல் - கிடைக்குமானல், பச்சடியும் - பச்சடியையும், தீண்டேன் - தொடமாட்டேன்; பருப்பினிலும் கை வையேன் - பருப்பையும் தொடமாட்டேன்; கிச்சடியும் தீண்டேன் - கிச்சடி உணவையும் தொடமாட்டேன்; கிழங்கும் எடேன் - கிழங்கு வகையைச் சேர்ந்த உணவையும் எடுக்க மாட்டேன்.

(க - ரை) எல்லாப் பதார்த்தங்களிலும் கீரையே விரும்பத் தக்கது.

## 2. சிரங்கு

(ப - ரை) செந்தில் - திருச்செந்தூரில் உள்ள, குமரா - முருகக் கடவுளே, திருமால் - மகா விஷ்ணுவின், மருகா - மருமகனே, என் சிந்தை - என் மனத்தில், குடிகொண்ட - வாசம் செய்கின்ற, தேசிகா - குருவே, நொந்த - (மிகவும்) துன்பமுற்ற, இம்மெய்யில் - (என்னுடைய) இந்த உடம்பில் (உள்ள), சிரங்கை, புண்ணை, விடியுமட்டும் - பொழுது விடியும்வரை, சொறிய - சொறிந்து கொள்வதற்கு, இரண்டு கை - இரண்டு கைகள், போதாது - போதாதனவாகும்.

**காண்** - முன்னிலை அசை.

(க - ரை) முருகக் கடவுளே! சிரங்கு ஒழிய அருள் புரிவாயாக.

## 3. வேலை

(ப - ரை) தோகை மேல் - மயிலின்மேல் ஏறி, உலவும் - உலவி வருகின்ற, கந்தன் - முருகக் கடவுளுடைய, சுடர்க் கரத்து - ஒளியையுடைய கையில், இருக்கும் - பொருந்தியுள்ள, வெற்றி வாகையே - வெற்றிக்கு அடையாளமான வாகை மாலையையே, சுமக்கும் - தாங்குகின்ற, வேலை - வேலாயுதத்தை, வணங்குவது - துதிப்பது, எமக்கு வேலை - எமக்குரிய (தினசரித்) தொழிலாகும்.

(க - ரை) கந்தவேளின் வேலாயுதத்தைத் துதித்தலே எமது தொழில்.

## 5. திருக்குறள்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (1)

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின். (2)

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானேர்க்கும் ஈண்டு. (3)

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (4)

அழுக்கா றவாவெகுளி இன்னச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். (5)

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. (6)

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (7)

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடிய இனிய சொலின். (8)

தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார். (9)

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (10)

பொழிப்புரை

1. எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

2. தூயஅறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானல், அவர் கற்ற கல்வியினுல் ஆகிய பயன் என்ன ?

3. மழை பெய்யாமல் போகுமானால் இவ்வுலகத்தில் வானோர்க்காக நடக்கும் திருவிழாவும் நடைபெறாது. நாள் வழி பாடும் நடைபெறாது.

4. செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்ய வல்லவரே பெரியார். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்ய மாட்டாதவர் சிறியோர்.

5. பொறாமை, ஆசை, சினம், கடும்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடம் கொடுக்காமல் அவற்றைக் கடந்து ஒழுகியதே அறமாகும்.

6. மக்களின் உடம்பைத் தொடுதல் உடம்பிற்கு இன்பம் தருவதாகும். அம்மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டல் செவிக்கு இன்பம் தருவதாகும்.

7. அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர். அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.

8. பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிமை உடைய சொற்களைச் சொல்லின் பாவங்கள் தேய்ந்து குறைய, அறம் வளர்ந்து பெருகும்.

9. ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்தபோதிலும் அதன் பயனை ஆராய்கின்றவர் அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

10. நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்க்கைக்குக் காரண மாக இருக்கும். தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும்.

TB
031(4)
N56

---

86817

[வித்தியாதிபதி அவர்களால் 23-7-55-ல் 4-ம் வகுப்பு வாசினேப் பாடபுத்தகமாக அங்கீகரிக்கப்பட்டது.]


## புதிய தமிழ்ப்பாட நூல்கள்

இவை யாவும் இனிய தமிழில் காலத்திற்கு ஏற்பப் புத்தம் புதிய பாடங்கள் சேர்த்துத் தயாரிக்கப்பட்டவை

| | | | |
|---|---|---|---|
| உமா வாசகம் (கீழ்ப் பிரிவு) வண்ணப் படங்களுடன் | | ... | 50 சதம் |
| உமா வாசகம் | I | ... | 50 ,, |
| ,, | II | ... | 60 ,, |
| ,, | III | ... | 70 ,, |
| ,, | IV | ... | 80 ,, |
| ,, | V | ... | 90 ,, |
| ,, | VI | ... | ரூ. 1-25 ,, |
| ,, | VII | ... | ரூ. 1-25 ,, |
| ,, | VIII | ... | ரூ. 1-50 ,, |


# UMA VACHAKAM

(TAMIL)

BOOK IV—STANDARD IV

---


KALAIVANI BOOK CENTRE

130, TRINCOMALI STREET, KANDY.



*Copyright*]


[*Price Cts.* 80

RBR/1128